# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 சித்திரை 25 ஞாயிற்றுக்கிழமை (07-05-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:138


## இலங்கையில் நடைபெறும் மோதல்களில் இந்திய இராணுவத்தின் தலையீடு இராது

### அத்வானி தெரிவிப்பு

புதுடில்லி,மே7

விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்துக்கும் இடையில் தற்போது நடைபெற்று வரும் மோதல்களில் இந்தியா எந்தவித இராணுவத் தலையீடுகளையும் மேற்கொள்ளாது.

இந்திய உள்துறை அமைச்சர் எல்.கே.அத்வானி இவ்வாறு தெரிவித்தார். நாக்பூரில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாடு ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததா

(10ஆம் பக்கம் பார்க்க)



## பேச்சு மூலம் தீர்வுகாண இந்தியா செல்வாக்கை பயன்படுத்த வேண்டும்

### ஜெயலலிதா கோருகிறார்

சென்னை,மே7

இலங்கை இனப்பிரச்சினைக்குப் பேச்சுக்கள் மூலம் தீர்வு காண்பதற்கு இந்தியா தனது செல்வாக்கைப் பயன்படுத்த வேண்டும்.

மேற்கண்டவாறு அ.தி.மு.க. பொதுச் செயலர் ஜெயலலிதா கோரிக்கை விடுத்துள்ளார்.

சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசும்போது அவர் இதனைத் தெரிவித்தார்.

(10ஆம் பக்கம் பார்க்க)

# அனைத்துக் கட்சிகளின் கூட்டத்தை வாஜ்பாய் நாளை கூட்டுகிறார்!

## அமெரிக்காவுக்கு இந்தியா விளக்கம்

புதுடில்லி,மே7

இலங்கையின் வடபகுதியில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து இந்திய வெளிவிவகாரத் துறைச் செயலாளர் லலித்மான்சிங் புதுடில்லியில் உள்ள இந்தியாவுக்கான அமெரிக்கத் தூதர் ரிச்சர்ட் செலஸ்ரையுடன் பேச்சு நடத்தி உள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இலங்கைப் படையினரின் தற்போதைய நிலைமை மற்றும் இந்தப் பிரச்சினையில் இந்தியாவின் நிலைப்பாடு என்பன குறித்து இந்தியவெளி

(10ஆம் பக்கம் பார்க்க)



## யாழ்ப்பாண நிலைமை குறித்து ஆராயப்படும்

புதுடில்லி,மே7

**இலங்கையின் வடபகுதியில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமை குறித்து விவாதிப்பதற்காக அடல் பிஹாரி வாஜ்பாய் நாளை திங்கட்கிழமை அனைத்துக் கட்சிகள் கூட்டம் ஒன்றைக் கூட்டுகிறார்.**

**புதுடில்லியில் உள்ள நாடாளுமன்றக் கட்டடத்தில் இந்தக் கூட்டம் நடைபெறும்**

யாழ்ப்பாணத்தில் படையினருக்கு ஏற்பட்டுள்ள நிலைமையை அடுத்து இலங்கை அரசு இந்திய அரசிடம் உதவி கோரியுள்ள நிலையில் இந்தக் கூட்டம் கூட்டப்பட இருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சில நாள்களாக இலங்கைப் பிரச்சினை குறித்த மத்தியில் ஆட்சியிலுள்ள கூட்டணிக் கட்சிகளுடனும் தமிழக முதல்வர் மு.கருணாநிதியுடனும் பிரதமர் வாஜ்பாய் பேச்சுக்களை நடத்தியிருந்தார்.

இதன் அடுத்த நடவடிக்கையாக அனைத்துக் கட்சிக் கூட்டத்தை பிரதமர் கூட்டியுள்ளார்.

இந்தக் கூட்டத்தில் இலங்கை

(10ஆம் பக்கம் பார்க்க)

## ரத்து!

கொழும்பு,மே7

தொடரும் யுத்த நிலையைக் கருத்தில்கொண்டு நாட்டிலுள்ள அரச பாடசாலைகள், கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றில் கொண்

( ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்ப்பாணத்தில் மேலும் பலர் அகதிகளாகும் நிலைமை!

### ஐ.நா.தூதரகம் கவலை

புதுடில்லி,மே7

யாழ்ப்பாணத்தில் தற்பொழுது நடைபெறும் மோதல்கள் மேலும் பலர் அகதிகளாவதற்கு வழிவகுக்கும் என்று அகதிகளுக்கான ஐ.நா. தூதுவர் சதாக்கோ ஒகாதா ரோய்ட்டருக்கு அளித்த பேட்டியில்கவலை தெரிவித்துள்ளார்.

பேட்டியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கையில் அண்மையில் ஏற்பட்டிருக்கும் நிலைமை கவலை தருகின்றது.

தொடர்ந்து போர் நடைபெற்று வருவதால் மக்கள் எங்கு போவார்கள்? என்பது குறித்து நாம் கவலை அடைந்துள்ளோம்.

யாழ்ப்பாணத்தில் செயற்படும் அகதிகளுக்கான ஐ.நா. தூதரக அமைப்பின் பிரதிநிதிகளை வெளியேற்றும் நோக்கம் எமக்கில்லை.

எமது பிரதிநிதிகள் யாழ்ப்பாணத்தில் இடம்பெயர்ந்தோருக்கு தங்குமிட வசதிகளை ஏற்படுத்தும் நடவடிக்கைகளிலும் உணவு விநியோகப் பணிகளிலும் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார்.

(இ-5)

## ஈழ அகதிகள் வருகை அதிகரிப்பு இராமேஸ்வரத்தில் உஷார் நிலை

சென்னை,மே7

இலங்கையிலிருந்து நேற்றும் 19 அகதிகள் படகுகள் மூலம் தமிழகம் வந்துள்ளனர் என்று அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் அனைவரும் மண்டபம் அகதி முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த சில நாள்களாக இலங்கையில் இருந்து தமிழகத்துக்கு வரும் அகதிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதை அடுத்து இராமேஸ்வரம் கடற்பகுதியில் ரோந்துப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இதற்கென புதுடில்லியில் இருந்து 100 சிறப்பு அதிரடிப் படையினர் வரவழைக்கப்பட்டு கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.(இ-6)

**வெட்டுப்புள்ளி உள்ளே ☛**

**2000/2001ஆம் கல்வி ஆண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கான வெட்டுப்புள்ளிகளின் விவரம் உள்ளே.**

## இந்திய விமானப் படைத் தளபதி இன்று கொழும்பு வருகிறார்

கொழும்பு,மே7

இந்திய விமானப்படைத் தளபதி ஏயார் சீவ் மார்ஷல் ஏ.வை. டிக்னிஸ் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு இன்று கொழும்புக்கு வருகை தரவுள்ளார்.

எதிர்வரும் 12ஆம் திகதி வரை கொழும்பில் தங்கியிருக்கும் அவர் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர், முப்படைகளின் தளபதிகள், கூட்டுப் படைகளுக்கான கட்டளையிடும் அதிகாரி ஆகியோரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

(இ-5)

## பனங் கொட்டுக்குள் இருந்த மர்மப் பொருள் வெடித்தது

### துன்னாலை கிழக்கில் நால்வர் காயம்

நெல்லியடி,மே7

துன்னாலை கிழக்கில் நேற்று மாலை இடம்பெற்ற சம்பவமொன்றில் நால்வர் காயமடைந்தனர்.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது:-

துன்னாலை கிழக்கைச் சேர்ந்த சிலர் புலோலி, ஆனை விழுந்தான் மயானப் பகுதியிலிருந்து விறகுக்காக பனங்கொட்டுக்களை ஏற்றி வந்தனர்.

பனங்கொட்டு ஒன்றுக்குள் வெடிபொருள் ஒன்று இருப்பதைக் கண்ட இவர்கள் அந்தப் பனங்கொட்டை சைக்கிள் ஒன்றில் ஏற்றி கிராம சேவையாளரிடம் கொண்டுபோக முற்பட்டனர். அப்பொழுது பனங்கொட்டுக்குள் இருந்த பொருள் பெரும் சத்தத்துடன் வெடித்தது.

பனங்கொட்டை ஏற்றி சைக்கிள் உருட்டிய மாணிக்கம் செல்வராசா (வயது 25), சிவலிங்கம் சிவகரன் (வயது21) மற்றும் அருகில் நின்ற சிவகரனின் மனைவி கோமதி (வயது 20) அவர்களது ஒருமாதக் கைக் குழந்தை கஸ்தூரி ஆகியோரே காயமடைந்தவர்களாவர்.

இவர்கள் நால்வரும் நேற்று மந்திகை ஆஸ்பத்திரியில் அவசரசிகிச்

(10ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய விமானம் ஒன்றும் ஹெலி ஒன்றும் திருவனந்தபுரத்தில் தயார் நிலையில்!

### யாழ்ப்பாணத்துக்கு மனிதாபிமான உதவிப் பொருள்களை ஏற்றிவர

சென்னை,மே7

யாழ்ப்பாணத்தில் சிக்கியுள்ள அரச படையினருக்கு தேவை ஏற்படின் மருந்து, உணவு போன்ற உதவிகளை அளிப்பதற்காக திருவனந்தபுரத்தில் உள்ள விமானப் படைத் தளத்தில் ஒரு விமானமும் ஒரு ஹெலியும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் 35 ஆயிரத்துக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் விடுதலைப்புலிகளால் சுற்றிவளைக்கப்பட்டுள்ளனர் என்றும் இந்த நிலையில் இவர்களுக்குத் தேவைப்படும் மருந்து மற்றும் அவசர நிவாரண உதவிகளை அளிப்பதற்காகவே இந்த விமானங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளன என்றும் இந்திய நாளிதளான தினமணி செய்தி வெளியிட்டுள்ளது.

கொழும்பில் உள்ள இந்தியத் தூதரக அலுவலகத்துக்கும் புதுடில்லியிலுள்ள இராணுவத் தலைமையகத்துக்கும் இடையில் உடனுக்குடன் தொலைபேசித் தொடர்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன் திருவனந்தபுரத்தில் உள்ள விமானப் படைத் தளத்துக்கும் தொலைபேசித் தொடர்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்றும் அந்தப் பத்திரிகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஏ.என்.32 ரக விமானமும் ஒரு ஹெலிக்கொப்டரும் திருவனந்தபுரம் விமானப்படைத் தளத்தில் கடந்த வெள்ளிக்கிழமை முதல் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அதேசமயம் யாழ்ப்பாணத்தில் சிக்கியுள்ள இலங்கைத் துருப்பினருக்கு மனிதாபிமான உதவிகளை

(10ஆம் பக்கம் பார்க்க)

## முக்கிய அறிவித்தல்

யா/உசன் இராமநாதன் மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் தரம் 5, தரம் 13 (G.C.E. A/L 2000) ஆகிய வகுப்புக்களைச் சேர்ந்த மாணவர்களை நாளை (08.05.2000) திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யா/மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்துக்கு வருகை தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

(76070) - *அதிபர்*

## பேராதனைக்கான போக்குவரத்து

பேராதனைப் பல்கலைக்கழகத்துக்கு போக்குவரத்து மேற்கொள்ள முடியாதிருக்கும் யாழ். குடாநாட்டினைச் சேர்ந்த அனைத்து மாணவர்களும், விரிவுரையாளர்களும் யாழ்ப்பாண பல்கலைக்கழக உபவேந்தர் மூலமாகப் பேராதனைக்குப் போக்குவரத்து ஒழுங்கு மேற்கொள்வது தொடர்பான கலந்துரையாடல் ஒன்றுக்கு *யாழ். பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்தில் 09-05-2000 செவ்வாய்க் கிழமை* அன்று காலை 10 மணிக்கு கூடுமாறு வேண்டப்படுகின்றார்கள்.

க.ஞானேஸ்வரன்
*சிரேஷ்ட விரிவுரையாளர்,*
*பொருளியற்றுறை,*
*பேராதனைப் பல்கலைக்கழகம்.*

(76056)

## N.C.A.

கல்வி நிலையம்
பருத்தித்துறை
**இரசாயனவியல்**
வகுப்புகள் ஆரம்பம்
08-05-2000
3-00 மணி (புதிய நேரம்)
2001 - ORGANIC - 3-00
2002 - BASIC - 4-00
ஆசிரியர்:-
வே.பரமேஸ்வரன் (B.Sc.)
(76079)

## SHAMROCK

* 2001 C. MATHS
சார்புவேகம்
பெறுதிப் பிரயோகம்
Mr. *சிவலோகநாதன்* B.Sc.
* 2002 அளவையியல்
Mr. *மகிந்தன்*
* Gr. 5 முதல் O/L வரை
(C/12058)

## 45 ஆம் நாள் நினைவஞ்சலி



உதிப்பு - - - | உதிர்வு 24 - 03 - 2000

அமரர்
**கனகரத்தினம் பாலசுந்தரமூர்த்தி**

புலம் பெயர்ந்து சென்ற போதும்
குலம் தழைக்கச் செய்தீரே-தென்
புலத்தார் அழைப்பை ஏற்று-எம் சிந்தை
கலங்கச் செய்து மறைந்தீரே!
ஞாலத்தில் நின் நினைவை மறவோமே!

*தற்காலிக முகவரி:*
மடத்தடி,
நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்
தனங்களப்பு

(C/12066)

## JOLLY STARS SPORTS CLUB - JAFFNA

Limited overs
**CRICKET TOURNAMENT - 2000**
Sponsored by
**E.S. PERAMPALAM & CO.**
JAFFNA
For the
**JOLLY STARS TROPHY**

Entries are called from Selected Clubs affiliated to the Jaffna District Cricket Association.

Entry Fee :- Rs.300/-
Entries Close on :- 12-05-2000 at 5.00 p.m.
Draw on :- 14-05-2000 at 5.00 p.m.
*Venue* :- **JAFFNA HINDU COLLEGE, JAFFNA.**

*Please Send your entries to*
*Mr. I. Shankar - Bharathy Printers,*
*430, K.K.S. Road, Jaffna.*

J.S.S.C.
*Secretary*
(C/12059)

## நீங்காத நினைவலைகள்

2 ஆம் ஆண்டு | 10 ஆம் ஆண்டு



திருமதி
**கமலாவதி நவரத்தினசாமி**
தோற்றம்: 18-03-1934
மறைவு: 29-04-1998



அமரர்
**கார்த்திகேசு நவரத்தினசாமி**
தோற்றம்: 12-06-1926
மறைவு: 12-09-1990

திதி: 07 .05.2000

அன்பிற்கும் பண்பிற்கும் உறைவிடமாய்
விளங்கிய எமது அன்புத் தெய்வங்களின்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

*பாசமுடன்*
திருமதி கலையரசி இராமச்சந்திரன்,
திரு.நவரத்தினசாமி கமலநாதன் (பிரான்ஸ்)
திரு.நவரத்தினசாமி இன்பநாதன் (சுவிஸ்)
(மக்கள்)

*'திருப்பதி'*
*மாதனை,*
*பருத்தித்துறை.*

(76007)

## கலந்துரையாடல்

வவுனியா, மட்டக்களப்பு *தேசியக் கல்வியியற் கல்லூரி* மாணவர்களை *நாளை (08.05.2000) திங்கட்கிழமை* காலை 9.00 மணியளவில் *யாழ்ப்பாணக் கல்வியியற் கல்லூரியில்* வந்து சந்திக்கும் வண்ணம் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

அதிபர்,
மாணவர்கள்.
(76080)



உ
தில்லையம்பதியாள் துணை.
**கோண்டாவில் தில்லையம்பதி**
**அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயில் 2000**
**விக்கிரம வருஷம் 25 ஆவது ஆண்டு**
## வைகாசி மஹோற்சவப் பெருவிழா

| | |
|---|---|
| 08-05-2000 | திங்கள் முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றம். |
| 12-05-2000 | வெள்ளி பிற்பகல் 6.30 மணிக்கு பூச்சப்பறம். |
| 13-05-2000 | சனி பிற்பகல் 6.30 மணிக்கு வசந்த உற்சவம். |
| 15-05-2000 | திங்கள் பிற்பகல் 2 மணிக்கு வேட்டை. ஸ்ரீ ஞானவைரவர் முன்றலில் பிற்பகல் 6 மணிக்கு சப்பறம். |
| 16-05-2000 | செவ்வாய் முற்பகல் 10 மணிக்கு தேர், மதியம் அன்னதானம். |
| 17-05-2000 | புதன் முற்பகல் 10 மணிக்கு பூரணை தீர்த்த உற்சவம். பிற்பகல் 4 மணிக்கு ஸ்ரீசக்கரபூசை, 4.30 மணிக்கு திருவூஞ்சல் 6 மணிக்கு கொடியிறக்கம். தொடர்ந்து சண்டேஸ்வர உற்சவம். |
| 18-05-2000 | வியாழன் நண்பகல் அன்னதானம், இரவு 7 மணிக்குப் பூங்காவனம். |
| 19-05-2000 | வெள்ளி காலை பிராச்சித்த அபிஷேகம், இரவு 7 மணிக்கு வைரவர் மடை. |

மஹோற்சவ பிரதமகுரு - **சிவஸ்ரீ சிவ.ஆறுமுகக் குருக்கள் அவர்கள்**

மங்களஇசை: இணுவையூர் சாமிநாதன் குழுவினர், பஜனை இசை எஸ்.குமாரசாமி அவர்கள்.

*முக்கிய குறிப்பு: நாளை (08-05-2000) திங்கட்கிழமை கொடியேற்ற தினமாகிய அன்று முற்பகல் 11.54 நிமிடம் தொடக்கம் 1 மணி 24 நிமிடம் வரையான சுபவேளையில் இராஜகோபுரத்துக்கான அங்குரார்ப்பண வைபவம் நடைபெறவுள்ளது. அடியார்கள் தங்களால் இயன்ற நிதி உதவியைத் தந்துதவுமாறு கேட்டுக்கொள்கிறோம். நிதி அனுப்பவேண்டிய முகவரி - கணக்கு இலக்கம்:- S/A 10712 மக்கள் வங்கிக் கிளை, யாழ்.பல்கலைக்கழகம்.*

தில்லையம்பதி,
07-05-2000

இங்ஙனம்,
**திருக்கோயில் பரிபாலன சபை.** (76057)

## ராஜா

யாழ்ப்பாணம்.
4 ஆவது வெற்றி வாரமாக
*அஜித், ஷாலினி*
நடிப்பில்
**அமர்க்களம்**
காட்சிகள் 10.00, 2.00,5.00
(C/11604)

## நாகம்ஸ்

சுன்னாகம்.
விஜய், ஷாலினி,
நடித்த
**கண்ணுக்குள் நிலவு**
(ரீலீஸ்)
காட்சிகள் 11.00, 2.30
(புதிய நேரம்)
(76027)

## லிபேட்டி

அச்சுவேலி.
மாதவன், ஷாலினி
நடிப்பில்
**அலைபாயுதே**
(புதிய வெளியீடு)
காட்சிகள் :10.30, 2.30
T.P- 070-212223
- 070-212678
FAX. No. 0094 - 70212223
(75999)

## தென்னாபிரிக்க அதிபர் விஜயம்

தென்ஆபிரிக்க ஜனாதிபதி தாபோ எம்பெய்கி சிம்பாப்வே நாட்டுக்கு விஜயம் செய்துள்ளார்.

சர்வதேச வர்த்தக சந்தை அமைப்பது தொடர்பாக சிம்பாப்வே அதிபர் ரொபேர்ட் முஹாபேயுடன் அவர் பேச்சு நடத்த உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அதே வேளை —

சிம்பாப்வேயில் வெள்ளை இனவிவசாயிகளுக்கு எதிரான தாக்குதல் குறித்தும் இரு நாட்டுத் தலைவர்களும் ஆராய்வார்கள் என்று கருதப்படுகிறது. [ஐ-ஒ]

# தமிழர்களை நாடு கடத்தக்கூடாது; ஜேர்மன் பேரணியில் கோரிக்கை!

பேர்லின் மே 7

ஜேர்மனியில் அரசியல் தஞ்சம் கோரியுள்ள இலங்கைத் தமிழர்களை நாடு கடத்தக்கூடாது எனக் கோரி அங்குள்ள அலெக்ஸாண்டர் பலக் என்ற இடத்தில் பேரணி நடத்தப்பட்டுள்ளது.

பேர்லின் ஈழத் தமிழர் நலன்புரிக் கழகம் மற்றும் ஜேர்மன் தமிழர் சுயநிர்ணய உரிமைக்கான ஒருமைப்பாட்டுக்குழு ஆகியன இந்தப் பேரணியை ஏற்பாடு செய்திருந்தன.

இலங்கையின் தமிழர்களுக்குப் பாதுகாப்பு இல்லை. அங்கு மனித உரிமைகள் பேணப்படாத நிலை உள்ளது. அதனால் ஜேர்மனியில் அரசியல் தஞ்சமடைந்துள்ள இலங்கைத் தமிழர்களைத் திருப்பி அனுப்பக்கூடாது என்று ஜேர்மன் அரசுக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதாகப் பேரணி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (ஐ-ஒ)

## தீவிபத்தில் 18 பேர் பலி!

இந்தியாவின் மதுராநகர் அருகே டீசல் விநியோக நிலையம் ஒன்றில் தீ விபத்து ஏற்பட்டது. இந்த விபத்தில் 18 பேர் உடல் கருகி இறந்தனர்.

மேலும் 80 பேர் எரிகாயங்களுக்கு உள்ளாகி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்களில் 24 பேரது உடல் நிலை ஆபத்தான கட்டத்தில் உள்ளது.

டீசல் விநியோக நிலையத்தில் பாதுகாப்புக் குறைபாடே தீவிபத்துக்குக் காரணம் என்று கூறப்படுகிறது. அந்த விநியோக நிலைய அனுமதி ரத்துச் செய்யப்பட்டுள்ளது.

# 208 ஐ. நா. சமாதானப் படையினர் சியராலியோனில் சிறை பிடிப்பு!

## நிலைமை மோசமடைகிறது

பிரீரவுன், மே 7

ஆபிரிக்க நாடான சியாராலியோனில் ஐ.நா. அமைதிப் படையைச் சேர்ந்த 208 சம்பிய நாட்டு படைவீரர்களை புரட்சிகர ஐக்கிய முன்னணி என்ற அமைப்பைச் சேர்ந்த கிளர்ச்சியாளர்கள் சிறைப் பிடித்துள்ளனர்.

இந்தப் படைவீரர்களுடன் சேர்த்து கிளர்ச்சியாளர்கள் சியாராலியோனில் பணி புரிந்த 318 ஐ. நா ஊழியர்களை இதுவரை கைது செய்துள்ளனர்

இவர்களில் 6 ஐ. நா ஊழியர்களை விடுவித்த கிளர்ச்சியாளர்கள் மற்றவர்களைத் தம் வசம் வைத்துள்ளனர்.

கைதானவர்களில் 23 இந்திய இராணுவத்தினரும் அடங்குவார்கள்.

நிலைமை தொடர்ந்து மோசமாகி வருவதால்மேற்கு நாடுகளின் தூதரகங்களிலும் ஐ. நா. அமைப்புகளிலும் பணிபுரியும் மேலதிக ஊழியர்களை நாட்டை விட்டு வெளியேற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது.

— இதே வேளை —

கிளர்ச்சியாளர்களிடம் சிறைப்பட்டுள்ளவர்களை விடுவிக்க உதவுமாறு ஐ. நா. சபைச் செயலாளர் நாயகம் கோபி அனான் ஆபிரிக்க நாடுகளின் தலைவர்களுக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

சியாராலியோனில் நடைபெற்று வந்த உள்நாட்டு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர ஐ. நா. அமைதிப்படை அங்கு பணியாற்றியது.

ஆனால் சமாதான நடவடிக்கைகள் தோல்வியடைந்ததால் கிளர்ச்சியாளர்களின் தாக்குதலை அமைதிப்படையினர் எதிர் கொள்ள வேண்டி நேரிட்டுள்ளது. (ஒ)

## நீரில் டீசல் கலந்ததால் ஒரிஸாவில் 5 பேர் பலி!

ஒரிஸாவில் வரட்சியால் பாதிக்கப்பட்ட பிரதேசத்தில் கடுமையான வயிற்றோட்ட நோய் பரவியுள்ளது. டீசல் கலந்த குடிதண்ணீரே இதற்குக் காரணம் என்று கருதப்படுகிறது.

இந்த நோய்க்கு இதுவரை 5 பேர் பலியாகியுள்ளதாகவும் 200 பேர் வரை பாதிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

வரட்சிப் பகுதியில் பெர்ஹாம் மாவட்டத்திலேயே வயிற்றோட்டநோயால் அதிக எண்ணிக்கையானோர் ஆபத்தான நிலையை அடைந்துள்ளனர்.

வரட்சியால்பாதிப்படைந்த மக்களுக்கு ரயில் மூலம் குடிதண்ணீர் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததாகவும்—

அப்போது ரயிலின் டீசல் கொள்கலன்களில் தவறுதலாகக் குடிதண்ணீர் நிரப்பப்பட்டு விநியோகிக்கப்பட்டிருக்கலாம் என்றும் சந்தேகம் எழுந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் இந்தக் காரணத்தை மாநில அரசு மறுத்துள்ளது. (ஒ)

### இஸ்ரேல் படை விலகியபின்

## தென்லெபனான் பாதுகாப்பை ஏற்குமாறுஐ.நா.விடம் கோரிக்கை

காசா, மே 7

தென் லெபனானில் இருந்து இஸ்ரேல் படைகள் விலகுவதை அடுத்து அந்தப் பகுதியின் பாதுகாப்பை ஐ. நா. சபை ஏற்கவேண்டும்.

இவ்வாறு சிரியாவின் பருக் அல்சாரா, எகிப்தின் ஆமீர் மூஸா மற்றும் சவூதி அரேபியாவின் இளவரசர் அல் பைசல் ஆகிய வெளிநாட்டமைச்சர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஐ. நா. சபைச் செயலாளர் நாயகம் கோபி அனானுக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் அவர்கள் இதனைத் தெரிவித்துள்ளனர்.

ஐ நா. சபையின் விதிகளுக்கமைய இஸ்ரேல் படை விலகலை மேற்கொள்ள வேண்டும். அரபுப் பகுதியின் தரை, கடல் மற்றும் வான் வெளி எல்லைகளை சர்வதேச சட்ட திட்டங்களுக்கு அமைய வரையறுத்த நிலையில் படை விலகல் நடைபெற வேண்டும் என்றும் மூன்று நாடுகளின் வெளிநாட்டமைச்சர்களும் ஐ. நா. சபைக்கு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர். (ஒ)

### ஏவுகணைத் தாக்குதல்

லெபனானில் தளம்கொண்டுள்ள இஸ்லாமிய தீவிரவாதிகள், இஸ்ரேல் படைகள் நிலை கொண்டுள்ள பகுதி மீது ஏவுகணைத் தாக்குதலை நடத்தினார்கள்.

இதனைத் தொடர்ந்து இஸ்ரேல் லெபனானின் மீது விமானத் தாக்குதலை நடத்தியது.

மேற்படி இரு தாக்குதல்களிலும் 2 பெண்கள் உட்பட பலர் மரணமடைந்துள்ளதாக உறுதி செய்யாத தகவல்கள் தெரிவித்தன. (ஐ-ஒ)

## பிலிப்பைன்ஸ் தீவிரவாதிகள் 48 மணிநேர யுத்த நிறுத்தம்

மணிலா, மே 7

பிலிப்பைன்ஸில் மோரோ இஸ்லாமிய தீவிரவாதிகள் நேற்றுக் காலை முதல் 48 மணி நேர தற்காலிக யுத்த நிறுத்தத்தை அறிவித்துள்ளனர்.

மின்னறுவா பகுதியில் மேற்படி தீவிரவாதிகள் இராணுவத்தினருடன் நடத்தி வரும் நேரடி மோதலை சுமுகமாக முடிவுக்குக் கொண்டுவரவே யுத்த நிறுத்தம் செய்துள்ளதாக அவர்கள் கூறியுள்ளனர்.

விமான நிலையம், துறைமுகம் உள்ளிட்ட பல இடங்களில் இராணுவத்துக்கும் தீவிரவாதிகளுக்கும் இடையே நடந்த மோதல்களில் 35 பொது மக்கள்வரை பலியாகி இருக்கலாம் என அஞ்சப்படுகிறது.

இதே வேளை —

ஜோலோவில் பகுதியில் பிலிப்பைன்ஸ் இராணுவம் தொடங்கியுள்ள தாக்குதல் நடவடிக்கையின் மூலம் அபுசாயப் தீவிரவாத அமைப்பினர் பணயக்கைதிகளைத் தடுத்து வைத்துள்ள இடத்தை நெருங்கி விட்டதாக இராணுவ அதிகாரி ஒருவர் கூறினார். (ஒ)

## சட்ட விரோதமாக நுழைந்தால் இந்தியாவில் கடும் தண்டனை

புதுடில்லி, மே 7

இந்தியாவுக்குள் சட்ட விரோதமாக நுழைபவர்களுக்குக் கடும் தண்டனை வழங்க வழி செய்யும் வகையில் இந்தியக் கடவுச்சீட்டுச் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரும் அரசின் முடிவை மத்திய அமைச்சரவை அங்கீகரித்துள்ளது

இந்தத் திருத்தத்தின் மூலம் இந்தியாவிற்குள் சட்ட விரோதமாக நுழைபவர்களுக்கு 5 ஆண்டு சிறையோ, 50 ஆயிரம் ரூபா அபராதமோ அல்லது இரண்டு தண்டனைகளும் ஒன்றாகவோ விதிக்கப்படும்.

நாட்டில் சட்டவிரோதக் குடியேறிகளைத் தடுக்கவும் அவர்களால் சட்டம் ஒழுங்கு சீர்குலைவதைக் கட்டுப்படுத்தவும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை —

இலங்கையிலிருந்து தமிழகத்துக்கு அகதிகளாகச் செல்வோர் நிலை மற்றும் அவர்கள் இந்தச் சட்டத்தின் கீழ் அடங்குவரா என்பது குறித்து அதிகாரிகள் எதனையும் தெரிவிக்கவில்லை. (ஒ)

அருள்மிகு
நெல்லியடி தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய
மஹோற்சவம் - 2000

மேற்படி ஆலய வருடாந்த மஹோற்சவம் நிகழும் விக்கிரம வருடம் சித்திரை மாதம் 26 ஆம் நாள் (08-05-2000) திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாள்கள் நடைபெறும்.

கொடியேற்றம் 08 - 05 - 2000 திங்கட்கிழமை காலை 9.30 மணி.
தேர்த் திருவிழா 16 - 05 - 2000 செவ்வாய் காலை 9. 00 மணி.
தீர்த்தத் திருவிழா 17 - 05 - 2000 புதன் பிற்பகல் 12. 45 மணி.

பகல் திருவிழா தினமும் காலை 5. 45 மணிக்கும் மாலைத் திருவிழா மாலை 4. 00 மணிக்கும் ஆரம்பமாகும்.

கொடியேற்ற தினமான 08 - 05 - 2000 திங்கள் காலை 7. 00 மணிக்கு அழகுமிகு வெளி மணிமண்டபத் திறப்பு விழாவும் நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.

★ அனைவரும் வருக! அருளமுதம் பெறுக!! ★

— ஆலய பரிபாலன சபையினர்

[சி-12063]

31 ஆம் நாள் நினைவஞ்சலி



தோற்றம் 05 — 03 — 1919

மறைவு 07 — 04 — 2000

திருமதி நடராசா தனபாக்கியம்

மென்மையான பேச்சு
மேன்மையான குணம்
அன்பான அரவணைப்பு
இன்பம் ஊட்டும் பார்வை
என்று காண்போம்
உன் ஆசைமுகம்?

இன்று (07—05—2000) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்
மகன், மருமகன்,
சகோதர சகோதரிகள்,
மைத்துனர், பேரமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சதுமலை. (76673)

# பத்திரிகையாளர் மீதான விசாரணைக்கு கண்டனம்

மட்டக்களப்பு, மே 7

கிழக்கிலங்கைப் பத்திரிகையாளர் சங்கத்தின் செயலாளர் இரா. துரைரட்ணம் கடந்த புதனன்று குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் விசரணைக்கு உட்படுத்தப்பட்ட சம்பவத்தைக் கிழக்கிலங்கைச் செய்தியாளர் சங்கம் கண்டித்துள்ளது.

இதுகுறித்து அந்த அமைப்பு அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளது. தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் பத்திரிகையாளர் மத்தியில் புரிந்துணர்வுத் தன்மையை ஏற்படுத்தும் நோக்கில் நடத்தப்பட்ட செயலமர்வைக் குற்றப் புலனாய்வுத்துறையினர் தவறாக எண்ணிவிட்டனர் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-7)

# மட்டக்களப்பு இளைஞனுக்கு பகிரங்கக் கசையடி தண்டனை

கொழும்பு, மே 7

மட்டக்களப்பில் பாலியல் வல்லுறவு குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட நபர் ஒருவருக்கு மட்டக்களப்பு மாவட்ட நீதிமன்றம் பகிரங்கக் கசையடி தண்டனை வழங்கியுள்ளது.

மட்டக்களப்பு ஏறாவூர்ப் பகுதியைச் சேர்ந்த சின்னத்தம்பி புவாரி அன்வர் என்பவருக்கே கசையடி வழங்கப்பட்டது.

பாலியல் வல்லுறவு தொடர்பாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இவர் விசாரணைகளின் பின்னர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தார்.

அத்துடன், மாதத்தின் முதலாவது மற்றும் மூன்றாவது சனிக்கிழமைகளில் ஏறாவூர் பொலீஸ் நிலையத்தில் சென்று கையொப்பம் இடுமாறும் பணிக்கப்பட்டிருந்தது. எனினும் இவர் குறித்த தவணையில் சென்று கையொப்பம் இடாது காலங்கடத்தி வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த 2 ஆம் திகதி இவர் மீதான வழக்கு மீண்டும் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டபோதே பகிரங்கக் கசையடி வழங்கப்பட்டது.

மட்டக்களப்பில் குற்றங்களுக்காகக் கசையடி தண்டனை வழங்கப்படுவது நீண்டகாலமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது, எனினும் அண்மையில் நியமனம் பெற்று வந்த நீதிவான் எஸ். சுரேந்திரன் இந்தத் தண்டனையை மீண்டும் ஆரம்பித்து வைத்துள்ளார். (ஐ-9)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நிற்சிங்கம் வள்ளிநாயகி

நாயன்மார்கட்டை வதிவிடமாகக் கொண்ட திருமதி நிற்சிங்கம் வள்ளிநாயகி நேற்று (06-05-2000)சனிக்கிழமை காலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நிற்சிங்கத்தின் (உதவி முகாமையாளர், இலங்கை வங்கி) அன்பு மனைவியும் காலஞ்சென்ற சண்முகம் நடராசாவின் (ஆசிரியர்-வவுனியா) அன்புச் சகோதரரும் சரவணபவன் (கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம்), லோகநாதன் (ஈஸ்வரன் சகோதரர் கம்பனி, கொழும்பு), கருணானந்தன் (நல்லூர் ப. நோ. கூ. சங்கம்), சிவானந்தன் (நோர்வே), தயானந்தன் (நல்லூர் ஸ்தான சி. சி. த. பாடசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும் திருமதி நா. சரவணபவன் (கன்னியர்மடம் மகாவித்தியாலயம்), உமாநந்தினி, தமயந்திதேவி, சுரநாதா, வாசுகி (சிறுப்பிட்டி அ. த. க. பாடசாலை) ஆகியோரின் அன்பு மாமியாரும் கௌமாரன், யேஸ்ரன், கிரிபுவனி, சத்திநாயகி, நிற்சிந்தன், மதுஷா, பிரகாஷ், வர்ஷா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (06-05-2000) சனிக்கிழமை மாலை நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

57, செம்மணி வீதி,
நாயன்மார்கட்டு.

(76060)

### கிருஸ்ணபிள்ளை ரகுராஜா (ரகு)

காளி கோயிலடி, மல்லாகத்தைச்சேர்ந்த கிருஸ்ணபிள்ளை ரகுராஜா 03 — 05 — 2000 அன்று கனடாவில் காலமானார். இவர் கிருஸ்ணபிள்ளை இரத்தினத்தின் பாசமிகு புதல்வனும் விமலாதேவி (பிரான்ஸ்), விக்கினராஜா (தம்பி), சீதாதேவி, பத்மாதேவி, சுபத்திராதேவி, இராஜினிதேவி (ஆசிரியை மல்லாகம் ம வி), வரதராஜா (பிரான்ஸ்), குமரராஜா (கனடா), விஜயராஜா ஆகியோரின் பாசமிகு சகோதரனும் சபாரத்தினம் (பிரான்ஸ்), மல்லிகாதேவி சுந்தரலிங்கம் (அமரர்), குலலிங்கம், பாலகாந்தன், விமலசோதி, கலைமதி (பிரான்ஸ்), இந்திரா (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கனடாவில் இன்று (07 — 05 — 2000) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
க. கிருஸ்ணபிள்ளை
(தந்தை)
(ரகுராஜா தொழிற்சாலை)

காளி கோயிலடி,
மல்லாகம்.

(76061)

## சமய சந்நிதிகளில்

கொழும்புத்துறை, மே 7

கோண்டாவில் தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீசிவகாமி அம்பாள் திருக்கோயிலின் வருடாந்த உற்சவம் நாளை திங்கட்கிழமை முற் பகல் 10.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத்தினங்கள் நடைபெறும்.

தேர்த்திருவிழா எதிர்வரும் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற் பகல் 10.00 மணிக்கும், மறு நாள் பூரணைதினம் முற்பகல் 10.00 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும். (ஐ-30)

★ ★ ★

யாழ்ப்பாணம், மே 7

ஆரியகுளம் அருள்மிகு ஸ்ரீமுத்துமாரியம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியது. உற்சவம் தொடர்ந்து பத்துத் தினங்கள் இடம்பெறவுள்ளது.

தினமும் மாலை 5 மணிக்கு பூசை வழிபாடுகளுடன் அம்பாள் உள்வீதி உலாவும், இறுதி நாளான எதிர்வரும் 14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு அம்பாள் தெருவீதி உலாவும் இடம் பெறவுள்ளது. (ஐ-9)

★ ★ ★

கொழும்புத்துறை, மே 7

கோண்டாவில் மேற்கு அருள்மிகு ஸ்ரீ சந்திரசேகர விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை திங்கட்கிழமை முற்பகல் 11மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிப் பத்துத்தினங்கள் நடைபெறும்.

தேர்த்திருவிழா எதிர் வரும் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7 மணிக்கும் தீர்த்தத் திருவிழா மறு நாள் பூரணை தின காலை 8-30மணிக்கும் இடம்பெறும். (ஐ-30)

## ஆரம்ப நிகழ்வு

யாழ்ப்பாணம், மே 7

பிளவத்தை அ. மி. த. க பாடசாலைக்கு குடி தண்ணீர், மின்சார விநியோக அங்குரார்ப்பண நிகழ்வு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 10. 30 மணிக்கு பாடசாலையில் இடம்பெறும்.

பாடசாலை அதிபர் நடராசா தலைமையில் இடம் பெற உள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மேற்கு 'போரூட்' திட்ட இணைப்பாளர் க. குணேந்திரதாஸனும் சங்கானைக் கோட்டக் கல்வி அதிகாரி சி. செல்லையா, இலங்கை மின்சாரசபைப் பொறியியலாளர் பொ சண்முகானந்தசிவம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். (ஐ-8)

## புலமைப் பரிசில்-2000

23. 04. 2000 அன்று நடைபெற்ற பரீட்சையில் அதிகூடிய புள்ளி பெற்றோர்

1) க. சுரேஸ்குமார் — யா. இ. ஆ. பா. — 165
2) ச. லக்ஷிகா — யா. இ. ஆ. பா. — 161
3) த. சுவாஸ்கர் — யா. கொ. இ. ஆ. பா. — 160
4) ற. பிரிகஸ்வினி — யா. இ. ஆ. பா. — 158
5) கை. தனுஷன் — யா. பரி. கல். — 157
6) ச. சாமனை — யா. இ. ம. ஆ. பா. — 151
7) த. திவாகர் — யா. பரி கல். — 151
8) ம. அபிநயா — கொழும்புத்துறை துரையப்பா வித். — 151

BOND யாழ். நகர்

(76075)

# மட்டக்களப்பில் இருந்து அனுமதிபெற்ற கல்விக் கல்லூரி மாணவருக்கு தற்காலிக மாற்று ஏற்பாடு

மட்டக்களப்பு, மே 7

யாழ்ப்பாணம் கல்வியியல் கல்லூரிக்கு அனுமதி பெற்று போக்குவரத்துப் பிரச்சினை காரணமாக அங்கு செல்ல முடியாத நிலையில் உள்ள மட்டக்களப்பு மாவட்ட மாணவர்களுக்கு மாற்று ஏற்பாடு செய்வதற்கு கல்வி அமைச்சு அதிகாரிகள் அனுமதி வழங்கியுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பொ. செல்வராசா கல்வி, உயர்கல்வி அமைச்சு அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுக்களை அடுத்து இந்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

கணித பாடநெறிக்குத் தெரிவானவர்கள் அட்டாளச்சேனை கல்வியியல் கல்லூரியிலும் —

இசை, நடன பாடநெறிகளுக்குத் தெரிவானவர்கள் மட்டக்களப்பு கல்வியியல் கல்லூரியிலும் —

தற்காலிகமாக இணைக்க ஏற்பாடாகியுள்ளது. (ஐ-3)

## ஆண்டு விழா

அரியாலை, மே 7

அரியாலை ஸ்ரீகலைமகள் சனசமூக நிலைய பாலர் பாடசாலையின் 23 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் விளையாட்டுப் போட்டியும் நிலைய முத்தமிழ் விளையாட்டு அரங்கில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும்.

நிலையத் தலைவர் வே. அருள்விந்தன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக அரியாலை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க பொதுமுகாமையாளர் சு. சண்முகலிங்கம் கலந்து கொள்வார். சிறப்பு விருந்தினர்களாக செ. ப ஜீவானந்தம், கு. சிவலிங்கம், சி. இரட்ணசிங்கம் ஆகியோர் கலந்து கொள்வார். (ஐ-17)

## கருத்தரங்கு

கொழும்புத்துறை, மே 7

கைதடி சச்சிதானந்தா ஆச்சிரமத்திலும் சரஸ்வதி சனசமூக நிலையத்திலும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு விழிப்புணர்வு உயிருட்டல் கருத்தரங்கு மனித முன்னேற்ற நடு நிலையத்தால் நடத்தப்படும். இணைப்பாளர் யோசப்பாலா தலைமையில் பயிற்சியும், கலந்துரையாடலும் அவ்வூர்இளைஞர்களுக்கு நடத்தப்படும். (ஐ-30)

## சமய அறிவுப் போட்டி

கொழும்புத்துறை, மே 7

யாழ். வண்ணை அரசடி ஸ்ரீ விநாயகர் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா கடந்த 27 ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இந்த உற்சவத்தை ஒட்டி நடத்தப்படும் சமய அறிவுப் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ். தட்டாதெரு இளைய தம்பி மகாவித்தியாலயத்தில் நடைபெறும். (ஐ-30)

## கப்பலில் லொறிகள் வந்தன

அரியாலை, மே 7

யாழ். குடாநாட்டில் உள்ள மேலும் இரு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இரண்டு லொறிகள் கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டுள்ளன.

பளை, கொடிகாமம் ஆகிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கே இந்த லொறிகள் வந்துள்ளன.

யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி கூட்டுறவு சமாசத்தின் உதவியுடன் இந்த லொறிகள் எடுத்துவரப்பட்டன. (ஐ-17)


உ

மாவை கொல்லங்கலட்டி அருள்மிகு

**ஸ்ரீவீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்**

**வசந்த மகோற்சவப் பெருவிழா**

09 - 05 - 2000 செவ்வாய்க்கிழமை
கொடியேற்றம்
15 - 05 - 2000 திங்கட்கிழமை பி.ப 2மணி
உற்சவமூர்த்தி மகாபிஷேகம்
16 - 05 - 2000 செவ்வாய்க்கிழமை பிற்பகல்
சப்பறத்திருவிழா
17 - 05 - 2000 புதன்கிழமை காலை 10மணி
தேர்த் திருவிழா
18 - 05 - 2000 வியாழக்கிழமை பகல் 10மணி
தீர்த்த உற்சவம்,
19 - 05 - 2000 வெள்ளிக்கிழமை
பிராயச்சித்த அபிஷேகம், வைரவர் பொங்கல்,

இவ்வாண்டு வெகுசிறப்பாகத் திருவிழா நடைபெற ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் திருவருள் செய்துள்ளார்.
தேர்முட்டித் திருப்பணிக்கு உதவுக!
தினமும் அன்னதானம் நடைபெறும்.

(76076) - அறங்காவலர்

வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ.கூ.சங்கம்,நீர்வேலி,

**செத்தல் மிளகாய் கொள்வனவு**

மேற்படி எமது சங்கம் விவசாயிகளிடமிருந்து நல்ல தரமான செத்தல் மிளகாயைக் கொள்வனவு செய்ய இருக்கின்றது. செத்தல் மிளகாயைச் சங்கத்துக்கு வழங்க விரும்பும் விவசாயிகள் சங்கத்தில் வேலை நேரத்தில் வழங்கவுள்ள செத்தல் மிளகாயின் மாதிரியுடன் தலைமைக் கந்தோரில் தொடர்பு கொள்ளலாம். வழங்கப்படும் செத்தல் மிளகாய் ஈரத்தன்மையற்ற நன்கு காய்ந்ததாகவும் வெள்ளைச் செத்தல் அற்றதாகவும் சிவப்பானதாகவும் நீளமுள்ளதாகவும் இருத்தல் வேண்டும். தங்களால் வழங்கப்படும் மாதிரியைப் பார்த்து விலை தீர்மானிக்கப்படும்.

பொது முகாமையாளர்.

நீர்வேலி,
04-05-2000

(சி/12065)

# பொலனறுவைதமிழ்இளைஞனை காணவில்லை என முறைப்பாடு

பொலனறுவை, ஹிங்குராங்கொட பகுதியில் இளைஞர் ஒருவர் காணாமற் போயுள்ளதாக மட்டக்களப்பு மனித உரிமை ஆணைக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு வாழைச்சேனையைச் சேர்ந்த இராமச்சந்திரன் வேல்ராஜ் (வயது 19) என்பவரே கடந்த 30 ஆம் திகதி காணாமற் போனவராவார்.

ஹிங்குராங்கொடப் பகுதியில் உள்ள அரிசி ஆலை ஒன்றில் வேலை பார்த்து வந்த இவர் சம்பவதினம் அரிசி ஆலையில் இருந்து பொருள்கள் வாங்கக் கடைக்குச் சென்றதாகவும் —

அதன்பின் இவர் என்னவானார் என்று தெரியவில்லை என்றும்—

தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-க-9)

# பயிர்ச்செய்கைக்கு உடனடியாக மண்எண்ணெய் தரக்கோரிக்கை

சண்டிலிப்பாய், மே 7

மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனம் தமது பிரிவில் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டு வரும் 72 விவசாயிகளுக்கு மண்எண்ணெய் அவசரமாகத் தேவைப்படுவதாகவும் இதனை மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் மூலம் பெறுவதற்கு ஒழுங்கு செய்து தருமாறும் உடுவில் சமநல சேவை கேந்திர நிலையப் பெரும்பாக உத்தியோகத்தருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இப் பிரிவில் பொன்னாங்காணி, வல்லாரை, வெற்றிலைக்கொழுந்து, கத்தரி, மிளகாய், மரவெள்ளி, புகையிலை ஆகிய பயிர்ச் செய்கையை மேற்கொள்ளும் இவ் விவசாயிகளுக்குக் கூடியவிரையில் இந்த மண்எண்ணெய் விநியோகிக்கப்பட வேண்டும் என்றும் இல்லாதுவிட்டால் இப் பயிர்கள் அழிந்துபோகும் நிலை ஏற்பட்டு விவசாயிகள் மிகுந்த கஷ்டங்களுக்கு ஆளாவார்கள் என்றும் சம்மேளனத்தின் தலைவர் சி. பொ. ம. வ. க. முதலியார் மேற்படி கடிதத்தில் மேலும் தெரிவித்துள்ளார்.

(ஐ-135)


## லொறிச்சாரதி தேவை

எமது கம்பனி விற்பனை வாகனத்துக்கு ஒரு லொறிச் சாரதி தேவை.

கீழ்க்காணும் பத்திரங்களுடன் 10-05-2000 புதன் கிழமை காலை 10 மணிக்கு நேரில் வரவும். மாநகர சபை எல்லைக்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது.

1. சாரதி அனுமதிப்பத்திரம்.
2. நற்சான்றிதழ் கடிதங்கள் (அண்மையில் பெற்றது.)
3. தேசிய அடையாள அட்டை.
4. வசிப்பிடம் உறுதிப்படுத்துவதற்கு கிராம சேவையாளரின் கடிதம்.

**எஸ். ஜே. அன். பி. ட்ரேட் ஏஜென்சி**
39, 3 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.

(76046)



யாழ்ப்பாணம்
## பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்
(வரையறுக்கப்பட்டது)

## கூட்டுறவு உணவக முகாமையாளர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

எமது சங்கத்தின் உணவகத்தை நடத்துவதற்கு இத்துறையில் போதிய அனுபவம் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்கள் யாவும் தபால் மூலமாகவோ, நேரடியாகவோ 10.5.2000 ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு முன்பு கிடைக்கக் கூடியதாக, பொது முகாமையாளர், யாழ்ப்பாணம் ப. நோ. கூ. சங்கம், 127, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பதாரர் பின்வரும் விவரங்களைக் கவனத்திலெடுத்தல் வேண்டும்.

1. விண்ணப்பதாரர் உணவகம் நடத்துவதிலும் உற்பத்திப் பொருள்கள் தயாரித்தலை மேற்பார்வை செய்தலிலும் அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும். அத்துடன் உணவகத்தின் கணக்குகளைச் சரியாகப் பேணக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.
2. மாதாந்தம் ரூபா 2500/- சம்பளமாகவும், மாதாந்தம் தேறிய இலாபத்தில் 15 வீதம் இலாபப் பகிர்வாகவும் வழங்கப்படும்.
3. வயதெல்லை: 30 — 50 வயதுக்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.
4. இந்தச் சங்க எல்லைக்குள் வசிப்பவருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
5. கல்வித் தகைமை — 8 ஆம் வகுப்பு சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

— பொது முகாமையாளர்

127, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.
05-05-2000.

(சி/12051)


பல லட்சம் ரூபா பெறுமதியான

# ச. தொ. ச., சலுசல பொருள்களை கொழும்பு திருப்பி அனுப்ப ஏற்பாடு

யாழ்ப்பாணம், மே 7

யாழ்ப்பாணத்தில் இயங்கும் சலுசல, கூட்டுறவு மொத்த விற்பனை நிலையம் (ச.தொ.ச) போன்ற நிறுவனங்களிலிருந்து பல லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் கொழும்புக்குத் திருப்பி அனுப்பப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சலுசலவிலிருந்து 30 லட்சம் ரூபா பெறுமதியான புடைவை வகைகள் யாழ்ப்பாணத்தில் விற்பனை செய்ய முடியாதுள்ளதால் திருப்பி அனுப்பப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம், பருத்தித்துறைப் பகுதிகளில் இயங்கும் கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்களின் கிளைகளிலிருந்து விளையாட்டு உபகரணங்களும் புடைவை வகைகளும், பாடசாலை' பாக்', சைக்கிள் ரயர், பருப்பு, நெஸ்ரம், நெஸ்கபே, நெஸ்பிறே, நுளம்புத்திரி, சன்ரஜன் பால்மா போன்ற இரண்டு கோடி ரூபா பெறுமதியான பொருள்கள் திருப்பியனுப்பப் படவுள்ளன.

மேற்குறிப்பிட்ட பொருள்கள் யாழ்ப்பாணத்தில் விற்பனை செய்ய முடியாதுள்ளதாலேயே திருப்பியனுப்பப் படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பொருள்கள் யாவும் பொதி செய்யப்பட்டு கப்பல் மூலம் கொழும்புக்கு அனுப்புவதற்கு தயாரான நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

(உ-5-8)

# அகதிகள் இடமாற்றம்

தென்மராட்சி, மே 7

பளை மாசார்ப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து விடத்தற்பளையில் தங்கியிருந்த குடும்பங்கள் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க சாவகச்சேரிப் பிரிவினரால் மீசாலை வடக்கில் உள்ள வீடொன்றுக்கு மாற்றி தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இந்தக் குடும்பங்களுக்கு அத்தியாவசியப் பொருள்கள் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினரால் வழங்கப்பட்டன.

(ஐ-117)

# மாபெரும் இரத்த தான நிகழ்வு

கொழும்பு, மே 7

வடக்கில் இடம்பெறும் சண்டைகளில் காயமடையும் படையினருக்கு ஒரு லட்சம் இளைஞர்கள் இரத்த தானம் செய்ய இருப்பதாக அமைச்சர் டி. எம். ஜயரத்தின தெரிவித்தார்.

விவசாய ஆராய்ச்சி, உற்பத்தி உதவியாளர் நிலையம் ஏற்பாடு செய்துள்ள நிகழ்ச்சி ஒன்றிலேயே இந்த இரத்த தானம் இடம்பெறவிருக்கின்றது என்றும் அவர் சொன்னார்.

(ஐ-க-3)

# உயர்தர பிரிவு ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 7

வட்டு. மத்திய கல்லூரியில் உயர்தர வகுப்பு கலைப்பிரிவு கடந்த வார இறுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கல்லூரி அதிபர் சி. சிவஞானபோதர் தலைமையில் நடந்த இது தொடர்பான வைபவத்தில் பிரதம விருந்தினராக வலி. மேற்குப் பிரதேசசபைத் தலைவர் என். திரிலோகநாதனும் சிறப்பு விருந்தினராக மூத்த பத்திரிகையாளர் எஸ். சின்னத்தம்பியும் பங்குபற்றினர்.

(ஐ-3)

# கல்விக்கல்லூரி அனுமதிபெற்ற மாணவர்களுக்கு

யாழ்ப்பாணம், மே 7

மட்டக்களப்பு, வவுனியா கல்வியியல் கல்லூரிகளுக்குத் தெரிவாகி போக்குவரத்து வசதி இன்மை காரணமாக அங்கு செல்ல முடியாத நிலையில் உள்ள மாணவர்களை நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ். தேசிய கல்வியியல் கல்லூரியில் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

வரும்போது அந்தக் கல்லூரிகளுக்குத் தெரிவு செய்யப்பட்டதை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் மற்றும் சான்றிதழ்களை எடுத்துவருமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க சிரேஷ்ட துணைப் பொதுச் செயலாளர் த. பஞ்சலிங்கம் கேட்டுள்ளார்.

(உ-3)


## முக்கிய அறிவித்தல்

பளை மத்திய கல்லூரிக்கு அருகில் இயங்கி வந்த விக்னேஸ்வரா லோன்றியில் சலவைக்காகத் துணி கொடுத்தவர்கள் இல. 654, நாவலர் றோட், அரியாலை என்ற முகவரியில் உடனடியாகப் பெற்றுக் கொள்ளவும். தவறினால் நாம் பொறுப்பல்ல.

சி. ராசா
உரிமையாளர்

(76059)



## கண்ணீர் அஞ்சலி

பளை உதவி அரசாங்க அதிபர்
திரு. சு. புத்திசிகாமணி அவர்களின் தந்தையார்

### வயிரமுத்து சுப்பிரமணியம்

அவர்கள் காலமான செய்தி கேட்டு அன்னாரின் குடும்பத்தினரின் துயரில் கலந்து கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், வெளிக்கள உத்தியோகத்தர்கள், கிராம உத்தியோகத்தர்கள்.

பிரதேச செயலகம்,
பளை.

(76063)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக்கிரியை அழைப்பும்



| அன்னை மடியில் | ஆண்டவன் அடியில் |
| --- | --- |
| 04 | 07 |
| — | — |
| 04 | 04 |
| — | — |
| 1934 | 2000 |

### திருமதி கனகசபை அன்னபூரணி

அம்மா, அம்மம்மா, அப்பம்மா, மாமி, தங்கச்சி, சின்னக்கா, ஆசை மச்சாள், சிஞ்சி எனக் கதறி அழுகின்ற நேரம் கேட்கவில்லையோ? கண்ணினை மூடிவிட்டீர் காணச்சகிக்கவில்லை. கரத்தாலே சைகை செய்து காரிகையே சென்று விட்டீர்!

உள்ளத்தில் எதை நினைத்தீர்! கண்ணீர் தான் சொரிந்ததுவே! உற்றாரும் மற்றாரும் உறவு சொல்லி அழுதனரே! எமது உள்ளம் அன்பாக வெதும்புவதைப் பார்ப்பார் யார்?

எமது இரத்தம் உறைகிறதே! உமது மறைவாலே! உணவாலே உயிர் அளித்த உத்தமியே! ஏன் மறைந்தாய்? உண்ணாது உறங்காது ஏங்கித் தவிக்கின்றோம். தரணி புகழ் தாரணியின் தான் சேரச்சென்றனையோ? தளராத நடையுடனே எப்போது வருவீரோ?

இன்று (07—05—2000) ஞாயிறு எங்கள் அன்புத் தெய்வத்தின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவுத் துயர் தாளாத
குடும்பத்தினர்.

''சத்தியவாசிவி'',
முதலாம் வட்டாரம்,
நயினாதீவு.

(76024)

### சண்டிலிப்பாயில் நடைபெற்ற

# நடமாடும் செயலக சேவையில் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு

நவாலி, மே 7

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலகத்தின் முதலாவது நடமாடும் செயலகசேவை கடந்த வியாழன் காலை 9 மணி முதல் பிற்பகல் 4. 30 மணி வரை சண்டிலிப்பாய் பதில் பிரதேச செயலர் தலைமையில் ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையில் இடம்பெற்றது.

இந்த நடமாடும் செயலக சேவையின் போது சகல திணைக்களங்களையும் சேர்ந்த அதிகாரிகளும் கிராம சேவையாளர்களும் கலந்து கொண்டு தமது அதிகாரங்களுக்குட்பட்ட பல பிரச்சினைகளை உடனுக்குடன் தீர்த்து வைத்தனர்.

தீர்வு காணப்பட்ட முக்கிய விடயங்கள் வருமாறு:-

சாவற்கட்டு மீனவ வீட்டுப் பயனாளிகளின் அசையாத சொத்துக்களின் இழப்பீட்டின் முதல் கட்டக் கொடுப்பனவாக 44 குடும்பங்களுக்கு10ஆயிரம் ரூபாவுக்கான காசோலைகள் பிரதேச செயலரினால்வழங்கப்பட்டன அத்துடன் மீன்பிடித் திணைக்களத்தின் ஒதுக்கீட்டில் ஐயாயிரம் ரூபா வழங்குவதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டுள்ளது.

★ நஷ்ட ஈட்டு விண்ணப்பங்கள் தொடர்பாக தங்களது விண்ணப்பங்களைப் பரிசீலிப்பதற்காக வந்த நூற்றுக்கு மேற்பட்ட விண்ணப்பதாரிகளின் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு அதற்கான உறுதிகளும் பெறப்பட்டன.

★ 5 ஆயிரம் ரூபா மீள்குடியமர்வு தொடர்பாக 30 பேரின் பிரச்சினைகளுக்கு உடனடித் தீர்வு காணப்பட்டது.

★ ஜெயபூமி திட்டத்தின் கீழ் 5 பேருக்கு அதற்கான உறுதிகள் வழங்கப்பட்டன.

★ பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுவதற்கு விண்ணப்பம் செய்த 15 பேருக்கு புதிய கொடுப்பனவு அட்டைகள்வழங்கப்பட்டன.

★ பிரதேச வைத்திய அதிகாரியினால் 24 பேருக்கு உயர் குருதி அழுத்தப் பரிசோதனை செய்யப்பட்டு 2 பேருக்கு உயர் குருதி அழுத்தம் இருக்கக் கண்டு பிடிக்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அத்துடன் 115 பேருக்கு பூச்சி மருந்துகளும் வழங்கப்பட்டன.

★ கால்நடை வைத்திய அதிகாரி பிரிவில் 60 பேர் 95 இடம்பெயர்வின் பின் தொலைந்த கால்நடைகள் பற்றிய விவரங்களையும் பதிவு செய்துள்ளனர்.

★ சமூக சேவைப் பகுதி வீடு எரிந்த ஒருவருக்கு 4 ஆயிரம் ரூபா நஷ்ட ஈட்டினை வழங்கியது.

தேசிய வீடமைப்பு அதிகார சபையினால் வீடமைப்பு சம்பந்தமான பிரச்சினைகளும் அத்துடன் தேசிய விசேட அடையாள அட்டை, உணவு நிவாரணம், மோட்டார் வாகனப் பதிவு, பிறப்புப்பதிவு, மின்சாரம் சம்பந்தமான மக்களின் பல்வேறு பிரச்சினைகளும் இனங்காணப்பட்டு அதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன.

(ஐ-100)

## வாழ்த்துகிறோம்

இன்று இறைபணியில்
10 வருடங்களைப் பூர்த்திசெய்யும்
**வண. பிதா மில்ரன் சொலமன்**
அவர்களை
கர்த்தரின் நாமத்தில் வாழ்த்துகின்றோம்.

குடும்பத்தினர், நண்பர்கள்.

செம்பியன் லேன்,
கொக்குவில். (75988)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரியரும் இணுவிலைச் சேர்ந்தவருமாகிய
**திரு. மனோகரன்**
அவர்களின் அன்புத் தந்தை
**கந்தையா துரையப்பா**
அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
யா/தாவடி இ.த.க. பாடசாலை.

(76019)

## அழைப்புக் கட்டளை

இல. 6 பிரிவு 55 (1)

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில்

குமாரசாமி சுந்தரகுமார்
35/1, இராசாவின் தோட்டம்,
யாழ்ப்பாணம்,

வழக்கு இல. ம. நீ. / 43

எதிர் வழக்காளி/

சுந்தரகுமார் தேவமலர்
அச்சுவேலி தெற்கு, அச்சுவேலி.
தற்போது மே/ பா. ச. கிருஷ்ணமூர்த்தி
24, வேர்திங் றோட், கட்ஜட்,
ஆஸ்திரேலியா.

மேலே பெயர் குறிப்பிட்டுள்ள எதிராளி / எதிராளிக்கு மேலே பெயர் குறிப்பிட்டுள்ள வழக்காளி தனக்கும் எதிராளிக்கும் இடையே பதியப்பட்ட திருமணத்தை ரத்துச் செய்வதற்காக.

இந் நீதிமன்றத்தில் உமக்கெதிராக வழக்குத் தொடர்ந்துள்ளாராதலினால் இதனோடு இணைக்கப்பட்டுள்ள பிராதுக்கு உமது மறுமொழி ஏதேனும் இருப்பின், 2000 ஆம் ஆண்டு ஆனிமாதம் 08 ஆம் நாளன்று, அல்லது அதன் முன்னர் நீதிமன்றத்திற் கோப்பிடும்படி இத்தால் நீவிர் தேவைப்படுத்தப்படுவதோடு சொல்லப்பட்ட தேதியன்று அல்லது அதன் முன்னர் நீவிர் மறுமொழி கோப்பிடத்தவறும் சந்தர்ப்பத்தில் வழக்கானது மறுகட்சிக்காரரில்லாமலே மேற்கொண்டு நடத்தப்பட்டு விளங்கப்படுமென அறிந்து கொள்ளுமாறு நீவிர் இத்தால் மேலும் தேவைப்படுத்தவும் படுகின்றீர்:

பதிவுபெற்ற தரணி மூலம் நீர் தோன்றாவிடில், சட்டமுறையான எல்லா அறிவித்தல்களும் சேர்ப்பிக்கப்படக்கூடிய முகவரியொன்றைக் கூறும் விவரக் குறிப்பொன்றைக் கோப்பிடுமாறு நீவிர் மேலும் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

நீதிமன்றக் கட்டளைப்படி
**து. சிறீமோகன்**
பதிவாளர்
மாவட்ட நீதிமன்றம், யாழ்ப்பாணம்.

குறிப்பு:- விளக்கத் தேதியை நிர்ணயிப்பதற்காக பகிரங்க நீதிமன்றத்தில் இவ்வழக்கு ஏற்படும் தேதி பற்றிய அறிவித்தலை நீவிர் பெறவிரும்பினால் பதிவு செய்யப்பட்ட முகவரியொன்றை இந்நீதிமன்றப் பதிவாளரிடம் கொடுத்துதவுமாறும் பதிவஞ்சல் மூலம் அனுப்பி வைப்பதற்கும் செலவை ஈடுசெய்வதற்குத் தேவைப்படும் முத்திரைகளைக் கொடுக்குமாறும், 80 ஆம் பிரிவின் மூலம் நீவிர் தேவைப்படுத்தப்படுகின்றீர்.

கையொப்பம் பதிவாளர்
வரைவு

**சு. இளங்கோவன்**
வழக்காளி சட்டத்தரணி

2000 ஆண்டு வைகாசி மாதம் 04 ஆம் நாளாகிய இன்று

(76020)

## கோரிக்கை

நீண்ட காலமாகத் திருத்தப்படாத நிலையில் பலத்த சேதமடைந்துள்ள சில்லாலை சென். ஜேம்ஸ் வீதியையும், அம்மன் வீதியையும் புனரமைப்புச் செய்து தருமாறு சில்லாலை தெற்கு சென். ஜேம்ஸ் கிராம அபிவிருத்திச் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

வலி. தென் மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலக பொறுப்பதிகாரிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் இக் கோரிக்கை விடப்பட்டுள்ளதாக சங்கச் செயலாளர் கி. எட்வேட்பங்கிராஸ் தெரிவித்தார்.

(ஐ-135)

வலி. கிழக்கு பிரதேசசபை, நீர்வேலி

## வேலைகளுக்கான ஒப்பந்தகாரரைப் பதிவு செய்தல் - 2000

வலி. கிழக்கு பிரதேச சபை நிர்வாக எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கேள்வி நடைமுறைகள் மூலம் வேலைகளைச் செய்ய விரும்பும் ஒப்பந்தகாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் என்னால் கோரப்படுகின்றன.

கீழ்க்குறிக்கப்பட்ட ஆவணங்களை அலுவலகத்தில் சமர்ப்பித்து மீளளிக்கப்படாத விண்ணப்பக் கட்டணமாக ரூபா 100 உம், மீளளிக்கப்படக்கூடிய வைப்புப் பணமாக ரூபா 10,000 உம் செலுத்துவதன் பேரில் இச்சபையின் வேலை ஒப்பந்தகாரராகத் தங்களைப் பதிவு செய்து கொள்ளலாம்.

1. ரூபா 500,000 இற்கான சொத்துக்களின் சான்றிதழ்
2. வியாபார பதிவுச் சான்றிதழ்
3. ICTAD பதிவுச் சான்றிதழ்
4. பொருள்கள், சேவைகள் வரிப்பதிவுச் சான்றிதழ்
5. தொழில்நுட்ப தகுதிச் சான்றிதழ் (வீதி அபிவிருத்தி அதிகாரசபை/வீதி அபிவிருத்தித் திணைக்களம்/ மாநகர/ நகர/ பிரதேச சபைகள்/ கட்டடம்/ நிர்மாணத் திணைக்களம்)
6. தொழில்நுட்பம், வாகனங்கள், உபகரணங்களின் ஆளணி முதலியவற்றின் சான்றிதழ்

இச்சபையுடன் பதிவு செய்து கொள்ளும் ஒப்பந்தகாரர்களுக்கு மட்டும் 2000 ஆம் ஆண்டில் ஒப்பந்த வேலைகள் தொடர்பில் கேள்விப் படிவங்கள் விநியோகிக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன்.

பதிவுகள் யாவும் 24 – 5 - 2000 ஆம் திகதி நண்பகல் 12. 00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

பூ. குணசிங்கம்
(ஜே. பி. யு. எம்)
தலைவர்
வலி. கிழக்கு பிரதேச சபை
நீர்வேலி

வலி. கிழக்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம், நீர்வேலி,
03-05-2000 (சி/12048)

## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



அமரர்
**சின்னத்தம்பி கிருஷ்ணர் வல்லிபுரம்**
(மாத்தனை அப்பா)

தோற்றம் 16—12—1916 மறைவு 09—04—2000

எம்மை விட்டுப் பிரிந்த எமது அன்புத்தந்தையாரின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் உதவி ஒத்தாசைகள் புரிந்தோருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு நாளை (08—05—2000) திங்கள் எமது இல்லத்தில் நிகழவுள்ள அந்தியேட்டி சபிண்டீகரணக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும்வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும்பணிவாக வேண்டுகின்றோம்.

வ. சிவஞானம் (மகன்),
திருமதி யோகேஸ்வரி சிவஞானம் (மருமகள்),
சி. சிவானந்தரூபன், சி. சிவராமன்.

'ஆனந்த பவனம்',
சாளம்பன்,
கரணவாய் மத்தி,
கரவெட்டி. (76040)

உதயன்

## நம்ப முடியவில்லை

இலங்கை முழுவதும் போர்க்கால சூழ்நிலையில் வைக்கப்பட்டுள்ளது. வடக்கு—கிழக்கிலேயே போர் நடைபெற்று வருகிறதாயினும் நாட்டின் எல்லாப் பகுதிகளும் எழுத்தளவில் — சட்டரீதியாக— போர் நடைபெறும் பிரதேசங்களாக்கப்பட்டுள்ளன.

அயல்நாடு ஒன்றுடன் — வெளிநாட்டுடன் — போர் செய்யும் நாடுகளே அனேகமாகத் தமது நாடுகளை போர்க்காலச் சூழ்நிலையில் வைப்பதுண்டு. வெள்ளம், பூகம்பம் மற்றும் இயற்கை அனர்த்தங்களினால் மக்கள் பாதிப்புறும் போதும் நிவாரணம் மற்றும் அவசரப் பணிகளைச் செய்யும் பொருட்டும் நாட்டைப் போர்க்காலச் சூழ்நிலையில் வைப்பது உண்டு.

ஆனால் இங்கு, விடுதலைப் புலிகளைப் போரில் தோற்கடிக்கும் பொருட்டு முழுநாட்டையும் போர் நிலைமையில் வைத்திருப்பதற்கான மிகக் கடுமையான சட்ட விதிகள் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளன.

கடந்த சுமார் இருபது வருடங்களாக இலங்கையில் நடைபெறும் உள்நாட்டுப் போருக்கு மூலகாரணம் இனப்பிரச்சினை — தமிழர் பிரச்சினையாகும். தமிழர்கள் கௌரவமாகவும், சுயமரியாதையுடனும் வாழ வழி செய்யும் அவர்களுக்குரிய நியாயமான உரிமைகளை — அவர்களது பிறப்புரிமைகளை — அரசியல் தீர்வு ஒன்றின் மூலம் வழங்கியிருந்தால் இத்தகையதோர் உள்நாட்டுப் போர் வந்திருக்காது.

தமிழர்களை இராணுவ ஆதிக்கத்தால் ஒடுக்குவதன் மூலம் — நசுக்குவதன் மூலம் — அவர்களின் உரிமைகளை வழங்காதிருக்க முடியும் என்று சிங்கள அரசியல் தலைவர்கள் மூன்று நான்கு தசாப்தங்களுக்கு முன்னரே திட்டமிட்டனர். அதன் விளைவே இன்று உக்கிர நிலை அடைந்துள்ள உள்நாட்டுப் போர்.

இந்தப் போரை முடிவுக்குக் கொண்டு வந்து தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் கண்டுவிடப் போவதாக நாட்டின் அரசுத் தலைவர்கள் பலரும் காலத்துக்குக் காலம் கூறிவந்தபோதிலும் அது பலிதமாகவில்லை. இப்போதும் கூட, நாட்டைப் போர் நிலைமையில் வைத்துள்ளபோதிலும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணும் முயற்சிகள் தொடரும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

போரைத் தீவிரப்படுத்துவதற்காக நாட்டின் மற்றும் தனிப்பட்ட மக்களின் வளங்களைத் திரட்டுவதற்கான சட்ட விதிகளை ஆழமாக நோக்கும்போது போரிடும் இரண்டு தரப்புகளுக்கும் இடையில் இப்போதைக்குச் சமரசம், சமாதானம் எதுவும் ஏற்படும் என்று எண்ண முடியவில்லை.

வடக்கு — கிழக்கில் ஓரளவு இயல்பு நிலையையேனும் உண்டாக்கி மக்களின் நாளாந்த வாழ்க்கையில் முன்னேற்றம் காண்பதற்கு போர் நிறுத்தமே உதவும் என்று கருதப்பட்டது.

ஆனால் இப்போது வந்துள்ள சட்ட விதிகள், அவர்களின் — குறிப்பாக குடாநாட்டு மக்களின் — நாளாந்த வாழ்க்கையை மேலும் முடமாக்கி உள்ளது; கட்டிப்போட்டுள்ளது. உணவுப் பொருள்கள் வருவது நிறுத்தப்பட்டுள்ளது; அதனால் விலையேற்றம்; போக்குவரத்து வசதியின்மை என்று பல வழிகளாலும் அவர்களது வாழ்க்கை இறுக்கப்பட்டுள்ளது. இத்தகைய ஒரு நெருக்கடியான, பதற்றமான சூழ்நிலைக்கு தமிழ் மக்களை ஆட்படுத்திக்கொண்டு, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படும் என்று கூறுவது வெறும் கேலிக்கூத்தே!

# தணிக்கை: நீக்காவிடில் நீதிமன்றத்தில் வழக்கு!

## பத்திரிகை ஆசிரியர் அவை அறிவிப்பு

கொழும்பு, மே 7

யுத்தச் செய்திகள் மீது விதிக்கப்பட்டுள்ள தணிக்கையை அரசு நீக்காது விட்டால் நீதிமன்றில் வழக்குத் தொடரப் போவதாக இலங்கைப் பத்திரிகை ஆசிரியர் அவை தெரிவித்துள்ளது.

இந்தத் தணிக்கையை வன்மையாகக் கண்டித்துள்ள அந்த அமைப்பு —

செய்திகளுக்கு முழுமையான தணிக்கையினை விதிப்பதன் மூலம் நாட்டுமக்களின் அடிப்படை உரிமைகளுக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது. இது சர்வாதிகார ஆட்சி முறைக்கு வழிவிட்டுக் கொடுக்கின்றது என்றே எண்ணத் தோன்றுகிறது — என்று தெரிவித்துள்ளது.

பத்திரிகைச் சுதந்திர அமைப்பான சுதந்திர ஊடகவியலாளர் சங்கமும் இந்தத் தணிக்கையைக் கண்டித்துள்ளது. (ஐ—க 3-7)

## இடம்பெயர்ந்த குடும்பங்கள்

# தங்கியுள்ள இடத்திலேயே நிவாரணம் பெறுவதற்கு ஏற்பாடு

தென்மராட்சி, மே 7

பளை, வடமராட்சி கிழக்கு ஆகிய பிரதேசங்களிலிருந்து இடம்பெயர்ந்து குடாநாட்டின் ஏனைய பகுதிகளில் தங்கியுள்ள மக்களுக்கான உலர் உணவு நிவாரணப் பொருள்கள் அவர்கள் தற்போது தங்கியுள்ள பகுதிகளில் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இடம்பெயர்ந்த மக்களுக்கு பளை, வடமராட்சி கிழக்கு ஆகிய பிரதேச செயலகங்கள் ஊடாகவே நிவாரணம் வழங்கப்படவுள்ளதாக ஏற்கனவே அறிவிக்கப்பட்ட போதிலும் தற்போதைய சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் தற்போது தங்கியுள்ள பிரதேசங்களில் நிவாரணப் பொருள்களைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

## பவுஸர் வாகனம் வந்தது

அரியாலை, மே 7

இலங்கை பெற்றோலியங் கூட்டுத்தாபனம் 6 ஆயிரத்து 600 லீற்றர் எரிபொருளை நிரப்பிச்செல்லும் பவுஸர் வாகனம் ஒன்றை யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைத்துள்ளது.

இந்தப் பவுஸர் வாகனம் கப்பல் மூலம் காங்கேசன்துறைக்கு எடுத்துவரப்பட்டு சேவையில் ஈடுபட்டு வருகின்றது. (ஐ-17)

# பொய்மைக்கும் கபடத்துக்கும் தலைசாய்க்காது இருங்கள்

சோதனைகள், நெருக்கடிகளின் போது மனம் சலித்து, நம்பிக்கை அற்று வாழ்வின் விரக்திக்கு தள்ளப்படுகிறோம். இவை மனித பலவீனத்தின் வெளிப்பாடுகளே. இன்று எம் எதிரே நடைபெறும் ஒவ்வொரு சம்பவங்களும் செய்திகளும் எமக்கு சவால்களே எனவே தான் இறை இயேசுவின் வாழ்வோடு ஒப்பிட்டு நோக்கும் மன வலிமையுடன் வாழ்வை எதிர்கொள்ள அழைப்பு விடுக்கப்படுகிறது.

ஞாயிறு நற்பிரசாதம்

"நீங்கள் என்னுள்ளும், என் வார்த்தைகள் உங்களுள்ளும் நிலைத்திருந்தால் நீங்கள் விரும்பிக் கேட்பதெல்லாம் நடக்கும், நீங்களும் மிகுந்த கனிதந்து என் சீடராய் இருப்பதே என் தந்தைக்கு மாட்சி அளிக்கிறது" என்றார் இயேசு.

இறை உறவில் உள்ளவருக்கு சவால்களே அதிகம். அதை எதிர் கொள்ளும் போது உங்களை ஏளனம் செய்வார்கள், குற்றம் சுமத்துவார்கள், கூடிக்குழி பறிப்பார்கள். இவை அன்றும் இயேசுவின் வாழ்வில் நடந்தவையே. ஆனால் கடவுளின் சித்தத்தை நிறைவேற்ற எதையும் தாங்கும் இதயம் கொண்டதால் உலக மீட்புக்கு வழி காட்டினார். அந்த வழியில் வாழ்வையே உன்னிடம் கேட்கிறார்.

இன்று அசாதாரண வாழ்வே சாதாரண வாழ்வாகி விட்ட உலகில் பொய்மைக்கும் கபடத்துக்கும், சுரண்டலுக்கும் தலைசாய்க்கும் மனங்களைக் கண்டு நீங்களும் அள்ளுண்டு போகாதிருக்க வார்த்தையும் வாழ்வும் கிறிஸ்தவ சாட்சியமாக வாழப்படவேண்டும். இவை அசாதாரண வாழ்வில் எதிர்கொள்ளும் சவால்கள்.

**- யோசப்பாலா -**

"பிள்ளைகளே! நாம் சொல்லிலும் பேச்சிலும் அல்ல; செயலில் உண்மையான அன்பை விளங்கச் செய்வோம். இதனால் நாம் உண்மையைச் சார்ந்தவர்கள் என அறிந்து கொள்வோம். வெளிவேடங்களால் எம் வாழ்வைச் சிதைக்காது வாழ்வுதான் வார்த்தைகளாக வெளிப்பட வேண்டும்" என்கிறார். ★

## நாளை

சித்திரை 25
திங்கட்கிழமை
திதி: பஞ்சமி
முன்இரவு 11.15 வரை.
நட்சத்திரம்: திருவாதிரை
பிற்பகல் 3.3. வரை.
சுபநேரம்: 11.54 1.24
ராகுகாலம்: 7.24 8.54
(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

**உதய வாக்கு**

நன்மைக்கு நன்மைசெய்.
தீமைக்கும் நன்மை செய்.
- இங்கர்சால்

# பயிர்ச் செய்கைப் பரப்புக்கேற்ப மண்எண்ணெய் கிடைக்கும்

விவசாயிகளுக்கு அவர்கள் தற்போது செய்கை பண்ணும் பரப்பு அளவுக்கேற்ப மண்எண்ணெய் வழங்கப்படவிருப்பதால் அது பற்றிய விவரங்களைத் தமக்கு உடன் சமர்ப்பிக்குமாறு உடுவில் கமநல கேந்திர நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் தமது பிரிவிலுள்ள விவசாய சம்மேளனங்களின் தலைவர்களுக்கு அனுப்பி வைத்துள்ள சுற்றறிக்கையில் கேட்டுள்ளார்.

கடந்த 27 ஆம் திகதி யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதற்கிணங்க விவசாயிகளுக்கு தற்போதைய செய்பரப்புக்கு ஏற்ப மண்எண்ணெயை விநியோகம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஆகவே விவசாயியின் பெயர், அடையாள அட்டை இலக்கம், விவசாய செய்கை மேற்கொண்டுள்ள பரப்பளவு, மண்எண்ணெய் வழங்கப்பட வேண்டிய பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பெயர் ஆகிய விவரங்களை உடனடியாக நிலையத்தில் உள்ள அலுவலகத்திற்குச்சமர்ப்பிக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-135)

# மீன் பிடித் தடையை அடுத்து சந்தைகளில் மீன் தட்டுப்பாடு

குருநகர், மே 7

குடாக்கடலில் மீன்பிடிக்க கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் அனுமதி மறுக்கப்பட்டிருப்பதனால் யாழ்ப்பாணத்திலுள்ள சந்தைகளில் மீனுக்குப் பெரும் தட்டுப்பாடும் விலை உயர்வும் ஏற்பட்டுள்ளது.

கொட்டடி, சின்னக்கடைச் சந்தைகளில் மீன் குறைந்தளவே விற்பனைக்கு வருகிறது. மீனுக்குப் பதிலாகக் கருவாடு விற்பனை நடைபெறுகிறது.

குடாக்கடலில் மீன்பிடி தடை செய்யப்பட்டுள்ளதனால் இப்பகுதிக் கடலில் தொழில் செய்யும் குருநகர் பாஷையூர், கொழும்புத்துறை மீனவர்கள் தொழில் இன்றி பாதிக்கப்பட்டுள்ளனர். பல குடும்பங்களும் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. இப் பகுதி மீனவர்களின் மீன்பிடி உபகரணங்களும் கடந்த செவ்வாய்க்கிழமை தொடக்கம் குடாக்கடல் பகுதியிலேயே கைவிடப்பட்ட நிலையில் உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-51-17-15)

# கடற்றொழில் பயிற்சிக் கல்லூரிக்கு உபகரணங்கள்

யாழ். மாவட்ட கடற்றொழில் பயிற்சிக் கல்லூரிக்கு அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் நான்கு லட்சம் ரூபா செலவில் பயிற்சி உபகரணங்களை வழங்க நிதி ஒதுக்கி உள்ளது.

இந்தப் பயிற்சிக்கல்லூரியில் பயிற்சி பெற்றுவரும் 70 மாணவர்களின் நன்மை கருதியே இப்பயிற்சி உபகரணங்களை இவ்வாண்டு நுண்கருத் திட்டத்தின் கீழ் இந்நிறுவனம் வழங்கவுள்ளதாக யாழ். பிரதேச செயலர் தெரிவித்தார். (ஐ-180)

## எதிரொலி..

- இடியன் -

● ஓய்வு பெற்ற படை வீரர்கள் மீண்டும் சேவைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

★ றிசேவ் படையினரே! Re - Serve!

● சூதாலாக நடித்தவர் தூக்கில் தொங்கி மரணம்!

★ விளையாட்டுக்காயினும் பொய் சொல்லாதே; நகைப்புக்காயினும் கழுத்திற் கயிற்றை மாட்டாதே!

● அ.இ.அ.தி.மு.க.வின் பொதுச்செயலாளராக இருப்பதற்குச் சட்டரீதியாக ஜெயலலிதாவுக்குத் தகுதியில்லை என்பதை நீதிமன்றில் நிரூபிக்கப் போவதாகச் சேடப்பட்டி முத்தையா சவால் விட்டுள்ளார்!

★ காலில் விழுவதே கதிமோட்சம் என்றிருந்த காலத்தில் இந்த உண்மை அவருக்குத் தெரிந்திருக்கவில்லையோ?

● கிருமி நாசினிகளைக் காய்கறித் தோட்டங்களில் உபயோகிப்பதைக் கைவிடுமாறு ஆலோசனை கூறப்பட்டுள்ளது!

★ நல்ல ஆலோசனை! அவை கிருமி நாசனி மட்டுமல்ல, 'மனித நாசனி'யும் கூட.

● டெஸ்ட் கிறிக்கெற் போட்டிகளில் எதிர்க்கோஷ்டியின் வெற்றியை உறுதிப்படுத்துவதற்காகச் சிலர் கைலஞ்சம் பெற்றார்களாம்!

★ கிறிக்கெற்றின் வாழ்வு அதனைச் சூது கௌவும் கிறிக்கெற் அதன்படி தோற்கும்!

● வவுனியா கல்விக் கல்லூரியிற் புதிய மாணவர்கள், சிரேஷ்ட மாணவர்களால் கடும் பகிடிவதைக்கு உட்படுத்தப்பட்டார்கள்!

★ சீனியர்களுக்குக் கொண்டாட்டம்; யூனியர்களுக்குத் திண்டாட்டம்!

● மலேசியாவுக்கு வந்த உல்லாசப் பிரயாணிகள் சிலர், பிலிப்பைன்ஸ் தீவிரவாதிகளால் பணயக் கைதிகளாகச் சிறைப் பிடிக்கப்பட்டுள்ளனர்.

★ உல்லாசத்தைச் சுகிக்க வந்தவர்கள், உபத்திரவங்களைச் சகிக்க வேண்டிய நிர்ப்பந்தம்!

● மேற்கு வங்கத்தின் பெயரை 'பங்களா' என மாற்ற நடவடிக்கை எடுக்குமாறு மத்திய அரசை முதல்வர் ஜோதி பாசு கோரியுள்ளார்.

★ என்னதான் புதுமை புரட்சி முன்னேற்றம் என்று சொன்னாலும், பழைமைப் பற்றையும் பெருமையையும் இலகுவில் விட்டுவிட முடியாது தான்!

● யாழ். குடாநாட்டில் இரவு நேரத் திருட்டுக்கள் அதிகரித்து வருகின்றன.

★ ஊருறங்கும் வேளையே தாம் இறங்கும் வேளை எனத் திருடர்கள் செய்து காட்டுகிறார்கள் அவ்வளவு தானா!

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

யோகாசனம், ஜோதிடம், சித்த வைத்தியம், தமிழ் நூல்கள் இருக்கின்றன. தொடர்பு: 135, சிவன் கோயில் முன்பாக, நல்லூர், யாழ்ப்பாணம். நேரம் பிற்பகல் 2 மணி தொடக்கம் மாலை 6மணிவரை. (76012)

குறோட்டன், செவ்வரத்தை, சைப்பிரஸ் பாம்ஸ் என்பனவும் மலிவு விலையில் சாடிகளும் விற்பனைக்குண்டு S. பாக்கியநாதன், 152/2, கோயில்வீதி, யாழ்ப்பாணம். (75964)

புதிய National J 11 டெக் (ஜப்பான் தயாரிப்பு) விற்பனைக்கு உண்டு. இல 396, உதயன் பழைய பணிமனை ஒழுங்கை, கைலாசபிள்ளையார் கோயிலடி, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (76062)

நல்ல இன அல்ஷேசன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு:- ஜெயராசசிங்கம் (வபா) காளியவத்தை, உடுவில் மேற்கு, சுன்னாகம். (76067)

நஷனல் T. V. 20 கலர், உஷா பிரிட்ஜ், கசியோ S A 21 ஓகன், மோட்டார் 2 K.V, பிளோ பொலிஷர் (Floor Polisher), எவர்சில்வர் பாத்திரங்கள், மரத்தளபாடங்கள் என்பன விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: 39/1, ராசாவின் தேபட்டம் (வைரவர் கோயில் லேன்), யாழ்ப்பாணம். (76068)

## இறைச்சிக்கோழி

நியாய விலையில் சகல நிறையிலும் புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். 54/2, சந்தன மாதா முன் ஒழுங்கை, கொழும்புத்துறை, பாண்டியன்தாழ்வு, யாழ்ப்பாணம். அல்லது 217/A, ஆஸ்பத்திரி வீதி, (முலவைச் சந்தி அருகில்), யாழ்ப்பாணம். (75968)

இறைச்சிக் கோழி (Broilers) விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு:40,கோயில் வீதி, யாழ்ப்பாணம். (75933)

Broiler, Cullbirds, Cockerels இறைச்சிக் கோழிகள் சுத்தம் செய்து (பாதிக்கோழி உட்பட) தினமும் பெற்றுக் கொள்ளலாம். நியாயமான விலை நுட்பமான நிறுவை தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை. (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), முத்திரைச் சந்தையடி, நல்லூர். (75951)

இறைச்சிக்கோழி (Broiler), கல்பேட்ஸ் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து வேண்டிய நிறைகளில் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: இல. 15, 6ஆம் குறுக்கு வீதி, யாழ்ப்பாணம். (75940)

இறைச்சிக்கோழி [Broiler) மற்றும் கல்பேட்ஸ். சேவல், விறாத்துக் குஞ்சு என்பன மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: இல 68, பழைய பூங்கா வீதி, யாழ்ப்பாணம் (76054)

## மதகு திருத்தம்

குருநகர், மே 7

யாழ். பிரதான வீதியில் அடப்பன் வீதிக்கு அருகில் உள்ள மதகு வீதிஅதிகார சபையினால் திருத்தியமைக்கப்பட்டு வருகிறது. (ஜ-51)

## தவறிவிட்டது

கந்துண்ணி புஸ்பாங்கதன் என்பவரது தே. அ அ. (இல. 471542954 V) பருத்தித்துறைக்கும் துன்னாலைக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் பருத்தித்துறை ஜானகி ரெக்ஸ்ரைல்ஸ் உடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும். (76016)

உடையார் லேன், கொக்குவில் கிழக்கு, கொக்குவிலைச் சேர்ந்த சோமசேகரம் லோகினி என்பவருடைய பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் (1983 — 04 — 15) யாழ்ப்பாணத்தில் 04—05—2000 அன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஸ்ரீ துர்க்கா நகைமாடம், 188 C, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (76005)

உரும்பிராய் வடக்கு உரும்பிராய் என்னும் முகவரியைச் சேர்ந்த திருமதி செல்லம்மா அப்புக்குட்டி என்பவரது தேசிய அ. அட்டை (305630101 V) 22-04-2000 அன்று யாழ். போதனா வைத்தியசாலைக்கும் பஸ் நிலையத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (76022)

மரிய தேவராசா மகேந்திரராஜா என்பவருடைய தேசிய அ. அட்டை (இலக்கம் 620784290 V), விசேட அ. அட்டை (இல. 090602627) என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் உடுவில் மகளிர் கல்லூரிக்கு முன்பாக, மானிப்பாய் வீதி, உடுவில் போதகர், தேவகுணானந்தம் வீட்டில் ஒப்படைத்துதவவும். (76030)

சிவலிங்கம் இராஜயோகம் என்பவரது விசேட அடையாள அட்டை(இலக்கம் 0907017710) 02-05-2000 அன்று சுன்னாகம் சிவன் கோவிலில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து (769), மினிபஸ் நேரக்கணிப்பாளர் சிவலிங்கம் என்பவரிடம் ஒப்படைத்து உதவவும். (76039)

443. நாவலர் வீதி, அரியாலை என்னும் முகவரியைச் சேர்ந்த தேவமோகன் விஜிதா என்பவரது விசேட அடையாள அட்டை(0902035400) அரியாலையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மேற்காணும் முகவரியில் அல்லது யா/ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் ஒப்படைத்துதவவும். (76055)

## விண்ணப்பப் படிவம்

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக்குழு இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவைக்கான படிவம் விற்பனையாகிறது. நாயகபாலன், மானிப்பாய். (76033)

## ENGLISH / SINHALA

சகல தரங்களுக்கும் விசேட வகுப்புகள் வழமைபோல் நடைபெறுகின்றன. பாடசாலை செல்லாதவர்கள் காலை 9.00 முதல் வகுப்புக்கள் ஒழுங்கு செய்து கொள்ளலாம். T. Sagathevan B.A London, 46, பிரப்பங்குளம் லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். T.P—3520. (75907)

## பசு விற்பனைக்கு

ஒன்பது மாத சினை கறவைப்பசு விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: எஸ். திருச்செல்வம், 57/30, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் (இலங்கை வங்கி, முன் ஒழுங்கை). (76002)

## ஆனந்தா சோதிட நிலையம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் சிறக்குமா? விவாகம் நடைபெறுமா? உங்கள் வினாக்கள் எவையானாலும் உரிய பதில் உடனே கிடைக்கும். டாக்டர் த. சிவானந்தன், பிரபல சோதிடர், செட்டித்தெருச் சந்தி, நல்லூர் (76021)

## ஆங்கிலம் விசேடமாக

O/L Distinction Credit பெறுபேறுடைய, A/L 2001, G.A.Q PaperClass, Spoken English ஒரு மாத காலத்தில் கற்பிக்கப்படும். B.Sc (Cey) 85, சிவன் கோயிலடி, சிவன் கோயில் பின்புறம் திருநெல்வேலி. (75946)

## பிறிமா புறொயிலர்

பிறிமா இன புறொயிலர் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. சனி, ஞாயிறுகளில் சுத்தம் செய்தும் பாதிக்கோழியும் பெற்றுக் கொள்ளலாம். காலை 7 - 12 மணிவரை.தொடர்பு:- V.S. 227,பிறவுண் வீதி, (சலட்டிச் சந்தி அருகில்)யாழ்ப்பாணம். (75877)

## உடன் விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள அலுமாரி (3—லாச்சி—ANTIQuE) உடன் விற்பனைக்கு உண்டு. விவரங்களுக்கு: 393. கே. கே. எஸ். வீதி, சிவன் கோயிலடி, யாழ்ப்பாணம். (76044)

## காணவில்லை

யாழ். மறைக்கல்வி நடுநிலையத்தில் உள்ள பொமனேரியன் நாய்க்குட்டி (பிறவுண் நிறம் — 4 மாதம் நிரம்பியது) 05-05-2000 அன்று காணாமல் போய்விட்டது. கண்டவர்கள் தயவு செய்து யாழ்ப்பாணம் மறைக்கல்வி நடு நிலையத்தில் ஒப்படைத்து உதவவும். (76036)

## இலகு திருமண சேவை

1970 படித்த கௌரவ குடும்ப NonR/C மணப்பெண்ணுக்கு உள்ளூர் வெளியூர் மணமகனும் 1969 செவ்வாயுள்ள MBBS Dr.-க்கு மணப்பெண்ணும் தேவை. சகல மணமக்கள் தேர்வுக்கு தொடர்பு: ஞாயிறுகளில் துரைவிமலா, K. K. S. வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (76027)

## ஆசிரியர் தேவை

G.C.E. O/L விஞ்ஞானம், வர்த்தகம் கற்பிக்கக் கூடிய ஆசிரியர் தேவை. விவரங்களுக்கு இல. 7, கஸ்தூரியார் லேன், யாழ்ப்பாணம். (76049)

## தேவை

தையலில் நன்கு அனுபவம் உள்ள பெண்கள் தேவை.

தொடர்பு:

இல. 739 A,
சக்தி தையல் நிலையம்,
ஆஸ்பத்திரி வீதி.
யாழ்ப்பாணம்.

(76069)

## முதலாம் வருட நினைவஞ்சலி



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 1918 — 03 — 23 | 1999 — 04 — 18 |

அமரர்

### சதாசிவம் இராசையா

திதி: 06–05–2000


ஆண்டு ஒன்று ஓடி மறைந்தாலும்
மாண்டிடுமா உங்கள் நினைவுகள்?

உங்கள் ஆத்மா சாந்தி பெற இறைவனை வேண்டுகின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

சிவன் வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய். (76058)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்

### சின்னத்தம்பி திருநாவுக்கரசு

(முன்னாள் அதிபர், நடேஸ்வரா கனிஷ்ட வித்தியாலயம்)

தோற்றம் 27-04-1914 — மறைவு 06-04-2000

கண்ணை இமை காப்பது போல் காத்து நின்று கல்வியோடு கலைகளும் பயிற்றுவித்து—அவைதனிலே கண்ணியமாய் எமை நிற்க வைத்த அன்புத்தந்தைக்கு எம் இதயக் காணிக்கை!

அன்னாரது இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும், மலர்வளையங்கள் அர்ப்பணித்தோருக்கும், பத்திரிகை, கடிதம், தொலைபேசி வாயிலாக அஞ்சலி தெரிவித்தோருக்கும் பல்வேறு உதவிகள் புரிந்த உறவினர், அயலவர், நண்பர்களுக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

உடுவில் மேற்கு,
சுன்னாகம். (76066)

# 2000/2001ஆம் கல்வி ஆண்டுக்கான பல்கலைக்கழக அனுமதிக்கான மாவட்ட ரீதியான வெட்டுப்புள்ளிகள்

| மாவட்டம் | வைத்தியத்துறை | பல் மருத்துவம் | மிருக வைத்தியம் | விவசாயம் | உணவு போஷாக்கு | உயிரியல் விஞ்ஞானம் | பொறியியல் (எம்.பி.ஐ) | பொறியியல் (சு.எம்) | பொறியியல் (ரி.எம்) | கணிய அளவீடு | கணனி விஞ்ஞானம் | பௌதிக விஞ்ஞானம் | முகாமைத்துவம் | பெருந்தோட்ட. மு.கா | முகாமைத்துவம் (ஏ) | முகாமைத்துவம் (பி) | வணிகவியல் | சட்டம் | கலை | கலை (எஸ்.ஏ.பி) | கலை (எஸ்.பி) | நிலஅளவை | பிர.விஞ்ஞானம் (உயிரியல்) | பிர. விஞ.(பௌதிகவியல்) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| கொழும்பு | 288 | 285 | 282 | 258 | 254 | 261 | 274 | 264 | 264 | 261 | 269 | 219 | 283 | 278 | 265 | 264 | 267 | 293 | 262 | 265 | 258 | 217 | 253 | 206 |
| கம்பஹா | 276 | 275 | 273 | 248 | 246 | 249 | 257 | 253 | 251 | 249 | 253 | 208 | 279 | 277 | 264 | 265 | 265 | 290 | 267 | 265 | 258 | 217 | 246 | 204 |
| களுத்துறை | 277 | 274 | 272 | 249 | 247 | 250 | 264 | 259 | 263 | 260 | 263 | 206 | 277 | 276 | 263 | 265 | 265 | 299 | 267 | 265 | 258 | 231 | 246 | 203 |
| மாத்தளை | 269 | 268 | 267 | 251 | 248 | 242 | 242 | 239 | 240 | 237 | 238 | 199 | 258 | 275 | 257 | 272 | 246 | 296 | 267 | 265 | 258 | 219 | 241 | 192 |
| கண்டி | 281 | 280 | 279 | 254 | 251 | 253 | 263 | 259 | 260 | 256 | 261 | 210 | 277 | 276 | 263 | 264 | 264 | 293 | 267 | 265 | 258 | 219 | 252 | 204 |
| நுவரெலியா | 219 | 217 | 216 | 201 | 190 | 191 | 185 | 182 | 182 | 181 | 224 | 200 | 243 | 241 | 233 | 242 | 227 | 276 | 243 | NQC | NQC | NQC | 188 | NQC |
| காலி | 288 | 285 | 282 | 258 | 255 | 256 | 266 | 265 | 264 | 262 | 265 | 216 | 278 | 276 | 264 | 264 | 262 | 302 | 267 | 265 | 258 | 239 | 253 | 205 |
| மாத்தறை | 286 | 285 | 282 | 259 | 252 | 253 | 263 | 257 | 259 | 256 | 262 | 208 | 274 | 273 | 263 | 265 | 265 | 288 | 266 | 265 | 258 | 241 | 252 | 205 |
| ஹம்பாந்தோட்டை | 274 | 272 | 269 | 257 | 249 | 245 | 242 | 239 | 237 | 236 | 235 | 192 | 266 | 269 | 255 | 268 | 253 | 294 | 267 | 265 | 258 | 232 | 243 | 186 |
| யாழ்ப்பாணம் | 281 | 279 | 278 | 256 | 249 | 250 | 270 | 264 | 264 | 262 | 267 | 212 | 280 | 265 | 265 | 266 | 267 | 264 | 267 | 265 | NQC | 236 | 248 | 206 |
| கிளிநொச்சி | 246 | 253 | 243 | 234 | 228 | 219 | 246 | 245 | 240 | 237 | 244 | 198 | 273 | 270 | 259 | 259 | 262 | 243 | 267 | 265 | NQC | 221 | 217 | 197 |
| மன்னார் | 223 | 217 | 215 | 202 | 199 | 185 | 211 | 204 | 184 | 183 | NQC | 192 | 248 | 217 | 219 | 246 | 224 | 243 | 248 | NQC | NQC | NQC | 184 | NQC |
| முல்லைத்தீவு | 253 | 247 | 245 | 233 | 228 | 223 | 260 | 252 | 247 | 243 | 246 | 209 | 284 | 264 | 262 | 266 | 264 | 263 | 267 | NQC | NQC | 214 | 220 | 206 |
| வவுனியா | 269 | 264 | 261 | 253 | 251 | 244 | 267 | 255 | 248 | 250 | 242 | 221 | 266 | 256 | 259 | 264 | 260 | 258 | 267 | 265 | NQC | 229 | 240 | 200 |
| திருகோணமலை | 255 | 254 | 253 | 237 | 233 | 225 | 223 | 222 | 219 | 218 | 218 | 181 | 246 | 245 | 237 | 261 | 238 | 272 | 258 | NQC | NQC | 207 | 224 | 187 |
| மட்டக்களப்பு | 258 | 255 | 254 | 244 | 242 | 232 | 244 | 242 | 239 | 240 | 238 | 191 | 259 | 251 | 254 | 266 | 253 | 251 | 267 | 265 | NQC | 234 | 235 | 186 |
| அம்பாறை | 262 | 261 | 259 | 248 | 244 | 236 | 222 | 220 | 217 | 217 | 216 | 180 | 257 | 256 | 245 | 265 | 246 | 282 | 267 | 265 | NQC | 214 | 242 | 198 |
| புத்தளம் | 265 | 264 | 261 | 251 | 241 | 241 | 240 | 237 | 233 | 234 | 232 | 186 | 264 | 272 | 260 | 265 | 257 | 289 | 266 | 265 | 258 | 220 | 238 | 182 |
| குருநாகல் | 278 | 277 | 276 | 256 | 250 | 253 | 257 | 256 | 255 | 252 | 254 | 200 | 274 | 273 | 262 | 265 | 263 | 298 | 266 | 265 | 258 | 238 | 249 | 196 |
| அநுராதபுரம் | 269 | 267 | 265 | 253 | 243 | 243 | 211 | 208 | 204 | 199 | 203 | 180 | 259 | 257 | 248 | 260 | 247 | 279 | 259 | NQC | NQC | 196 | 240 | NQC |
| பொலன்நறுவ | 234 | 233 | 232 | 218 | 216 | 210 | 192 | 188 | 180 | NQC | NQC | NQC | 246 | 242 | 236 | 236 | 231 | 280 | 250 | 265 | NQC | NQC | 209 | NQC |
| பதுளை | 257 | 256 | 255 | 242 | 234 | 226 | 222 | 221 | 220 | 216 | 218 | 181 | 262 | 267 | 259 | 259 | 250 | 286 | 263 | NQC | 258 | 206 | 224 | 181 |
| மொனராகல | 236 | 235 | 234 | 222 | 213 | 209 | 194 | 182 | NQC | NQC | 188 | NQC | 254 | 253 | 248 | 261 | 238 | 269 | 262 | NQC | NQC | NQC | 207 | NQC |
| கேகாலை | 274 | 273 | 272 | 257 | 247 | 248 | 258 | 254 | 253 | 249 | 257 | 209 | 275 | 272 | 262 | 265 | 262 | 291 | 266 | 265 | 258 | 229 | 245 | 207 |
| இரத்தினபுரி | 268 | 267 | 264 | 247 | 239 | 240 | 238 | 233 | 237 | 232 | 234 | 200 | 271 | 275 | 258 | 264 | 259 | 284 | 267 | 265 | 258 | 226 | 237 | 195 |

# சகல கூ.சங்கங்களும் உடனடியாக பொருள்களைத் தருவிக்க வேண்டும்

## செயலக கூட்டத்தில் தீர்மானம்

யாழ். மாவட்டத்தில் உள்ள சகல ப.நோ.கூட்டுறவுச் சங்கங்களும் விவசாய நுகர்ச்சி சந்தைப் படுத்தல் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் ஊடாக கொழும்பிலிருந்து கப்பல் மூலம் உடனடியாக அத்தியாவசியப் பொருள்களைத் தருவிக்க வேண்டும் என்று நேற்றுமுன்தினம் யாழ். செயலகத்தில் ப. நோ.கூ.சங்கத் தலைவர்கள் மற்றும் பொது முகாமையாளர்களுடன் யாழ். அரசஅதிபர் நடத்திய கலந்துரையாடலில் தீர்மானிக்கப்பட்டது.

குடாநாட்டின் உணவுப் பொருள் கையிருப்பு நிலைவரம் மற்றும் எரிபொருள் விநியோகம் தொடர்பாக ஆராய்வதற்கென யாழ். அரசாங்க அதிபர் க.சண்முகநாதன் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.கே. சண்முகநாதனும் கலந்து கொண்டார். இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட ஏனைய தீர்மானங்களின் விவரங்கள் வருமாறு:-

* ப.நோ.கூ.சங்கங்கள் கூட்டுறவு சமாசத்திடமிருந்து மட்டுமே பொருள்களைக் கொள்வனவு செய்யவேண்டும். தனியார்துறையினரிடம் பொருள்களைப் பெறக் கூடாது.
* தற்போதைய நிலையில் பிரச்சினைகள் ஏற்படும் இடங்கள் என எதிர்பார்க்கப்படும் பகுதிகளிலுள்ள ப.நோ.கூ.சங்கங்கள் தமது சொத்துக்கள் மற்றும் பொருள்களை பாதுகாப்பான இடங்களில் களஞ்சியப்படுத்தல் வேண்டும்.
* யாழ். செயலகத்தினால் ப.நோ.கூ.சங்கங்களுக்கு விநியோகிக்கப்படும் கோதுமை மாவை எந்தவித காரணம் கொண்டும் தனியார் கடைகளுக்கு விநியோகிக்கக் கூடாது.
* தற்போதைய சூழலைப் பயன்படுத்தி பொருள்களைப் பதுக்கி வைத்திருக்கக் கூடாது. அத்துடன் பொருள்களின் விலையை அதிகரிக்கவும் கூடாது.
* இடம்பெயர்ந்தவர்களுக்கு அவர்கள் தங்கியிருக்கும் இடங்களில் உள்ள ப.நோ.கூ. சங்கங்கள் மூலமே நிவாரணம் வழங்க வேண்டும்.
* நாளை திங்கட்கிழமை முதல் ப.நோ.கூ.சங்கங்கள் ஊடாக ஒவ்வொரு குடும்பத்திற்கும் 2 லீற்றர் மண்எண்ணெய் விநியோகம் செய்ய வேண்டும். இவ்வாறு அந்தக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.


உசன் கந்தசாமி கோயில் வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2000

உசன் கந்தசாமி கோயில் வருடாந்த மஹோற்சவ விஞ்ஞாபனம் நாளை (08-05-2000) திங்கட்கிழமை காலை 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தேர், தீர்த்த உற்சவத்துடன் இனிது நிறைவெய்துமென்பதை முருகன் அடியார்களுக்கு அறியத்தருகிறேன்.

- தர்மகர்த்தா,
உசன் கந்தசாமி கோயில்.

(76081)


# மின் துண்டிக்கும் வேளைகளில் வீடுகளில் திருடர் கைவரிசை

அரியாலை,மே7

ஈச்சமோட்டைப் பகுதியில் மின்சாரம் தடைப்படும் நேரத்தில் திருடர்கள் வீடுகளில் தமது கைவரிசையைக் காட்டிவருகின்றனர்.

மின்சாரம் தடைப்படும் வேளைகளில் திருடர் கோஷ்டியினர் மிகவும் தந்திரமாக வீடுகளுக்குள் நுழைந்து பெறுமதி மிக்க பொருள்களைக் களவாடிச் செல்வதாகத் தெரிவிக்கப்பட்டது.

அண்மையில் இப்பகுதியில் மின்சாரம் திடீரெனத் தடைப்பட்ட சமயம் இரண்டு வீடுகளில் திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

ஒரு வீட்டில் வீடியோ டெக்கையும் மற்றைய வீட்டில் மேசை லாச்சிக்குள் இருந்த தங்க நகைகளையும் மிகவும் சாதுரியமாகச் சூறையாடிச் சென்றுள்ளனர்.

(ஐ-17)

## இடமாற்றம்

வடமராட்சி கிழக்கில் ஏற்பட்ட பதற்ற நிலையை அடுத்து பருத்தித் துறைப் பிரதேச சபையின் செம்பியன்பற்று உப அலுவலகம், குடத்தனை உப அலுவலகம் ஆகியன பருத்தித்துறை பிரதேச சபைக்கு இடமாற்றப்பட்டுள்ளன. (ஐ-173)


கண்ணீர் அஞ்சலி

எமது நிர்வாக சபை உறுப்பினர்
சு.புத்திசிகாமணி அவர்களின்
அன்புத் தந்தையார்
வயிரமுத்து சுப்பிரமணியம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தவர்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நிர்வாக சபை உறுப்பினர், ஊழியர்கள்,
அங்கத்தவர்கள்.
யாழ்.வை.எம்.சீ.ஏ.

(C\12068)

# அரபு நாடுகள் கவலை தெரிவிப்பு

கொழும்பு,மே7

இஸ்ரேலுடன் ராஜீய உறவுகளை மீண்டும் ஏற்படுத்திக் கொள்வது என்று இலங்கை அரசு எடுத்த திடீர் முடிவு குறித்துக் கொழும்பிலுள்ள அரபு நாடுகளின் தூதுவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இலங்கை பலஸ்தீன நட்புறவுக் கழகத்தின் தலைவரும் மீன்பிடித் துறை அமைச்சருமான மகிந்த ராஜபக்ஷவைச் சந்தித்தபோதே அரபு நாடுகளின் தூதுவர்கள் தமது கவலையைத் தெரிவித்தனர்.

20 அரபு நாடுகளின் தூதுவர்கள் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(இ-9)

# யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மூவர் வவுனியாவில் சுட்டுக்கொலை

## ஒருவர் தப்பி ஓடிய பொலீஸார்

வவுனியா,மே7

வவுனியா வீரபுரம் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு 9.30 மணியளவில் இனந்தெரியாத சிலரால் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

பொலீஸில் கடமையாற்றிக் கொண்டிருந்த சமயம் இரண்டு ஆண்டுகளுக்கு முன் ஓமந்தைப் பகுதியில் இருந்து தப்பி ஓடி வந்த எஸ்.சுரேந்திரன் (வயது 30) என்பவரும் அவரது தந்தையாரான செல்வராசா (வயது 65) மற்றும் தாயாரான கெங்காதேவி (வயது 63) ஆகியோரே கொல்லப்பட்டவர்கள் ஆவர்.

இரவு நேரத்தில் திடீரென வீட்டினுள் நுழைந்த இனந்தெரியாத ஆயுததாரிகள் சிலர் இவர்கள் மீது கண்மூடித்தனமாகத் துப்பாக்கிப்பிரயோகம் செய்து விட்டுத் தப்பியோடி விட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இக் கொலைகளுக்கான காரணம் என்ன என்பது குறித்து எதுவும் தெரியவரவில்லை. இவர்கள் மூவரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்கள் என்று கூறப்படுகின்றது. (இ-6)

## அமெரிக்கா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விவகாரத்துறைச் செயலர் அமெரிக்கத் தூதருக்கு விளக்கியதாகக் கூறப்படுகின்றது.

அதே சமயம் வாஷிங்டனில் உள்ள இந்தியத் தூதர் நரேஸ் சந்திரா அமெரிக்க வெளிவிவகாரத் துறை உதவிச் செயலாளரான கார்ல் இன்ரர் போர்த்துடன் இலங்கை நெருக்கடி குறித்துப் பேசியதாகவும் செய்திகள் தெரிவித்தன. (இ-6)

## இந்திய விமான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்குவதற்காக இந்தியாவின் தெற்கு இராணுவத் தலைமை உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகப் பத்திரிகைகளில் வெளியான செய்திகளை இந்திய விமானப்படை அதிகாரி ஒருவர் மறுத்துள்ளார். (இ-5-6-4-8)

## இலங்கையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வது:-

முன்னர் இலங்கைக்கு இந்திய அமைதிப்படை அனுப்பப்பட்டது போன்று இம்முறை அனுப்பப்பட மாட்டாது.

இலங்கை நெருக்கடியைக் கையாளுவதில் மத்தியில் ஆட்சியிலுள்ள தேசிய ஜனநாயகக் கூட்டணிக் கட்சிகளிடம் கருத்தொற்றுமை உள்ளது. குறிப்பாக கூட்டணியில் அங்கம் வகிக்கும் தமிழகக் கட்சிகளிடையே இதற்கு முழு ஆதவு உள்ளது.

இலங்கை நெருக்கடியைக் கையாளும் நடவடிக்கையில் தமிழக முதல்வர் மு.கருணாநிதியின் நிலையில் மாற்றம் எதுவும் இல்லை.

இலங்கைக்கு பாகிஸ்தான் அல்லது இஸ்ரேல் உதவி வழங்கினால் பிராந்தியத்தில் தனது இறைமையை பாதுகாக்கும் திறன் இந்தியாவுக்கு உண்டு.

இப்படி அவர் மேலும் தெரிவித்தார். (இ-6)

## பேச்சு மூலம்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இலங்கையில் வாழும் தமிழர்களுக்கு சட்டபூர்வமான முழு உரிமையும் வழங்கப்பட வேண்டும். பேச்சுக்கள் மூலம் இலங்கைப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுவதையே எமது கட்சி விரும்புகின்றது.

தற்போதைய நிலையில் இலங்கைக்கு இராணுவ உதவிகளை வழங்க இந்திய அரசு மறுத்துள்ளமை வரவேற்கக்கூடியது - என்றார்.

இந்தியாவில் புலிகள் மீதான தடை தொடர்ந்து நீடிக்கப்பட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார். (இ-6-8-ஒ)

## பனங் கொட்டுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்த நால்வரில் மாணிக்கம் செல்வராசா வலது கை துண்டிக்கப்பட்ட நிலையிலுள்ளார். அவரது இடது கையிலும் விரல்கள் துண்டிக்கப்பட்டுள்ளன. (இ-109)

## அனைத்துக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யின் தற்போதைய நிலைகுறித்தும் அது தொடர்பாக இந்தியா எடுத்துள்ள நிலைப்பாடு குறித்தும் எதிர்க்கட்சிகளுக்கு பிரதமர் விளக்குவார் என்றும் -

இலங்கையில் தற்போது ஏற்பட்டுள்ள நிலைமையில் இந்தியாவின் நிலைப்பாடு குறித்து அவர் எதிர்க் கட்சிகளின் கருத்துக்களைக் கேட்டறிவார் என்றும் -

கூறப்படுகிறது. (இ-6)

### இலங்கைக்கு இராணுவமோ, இராணுவ தளபாடங்களோ இல்லை

# மத்திய அரசு தனது முடிவில் மிகவும் உறுதியாக உள்ளது

## டில்லியிலிருந்து திரும்பிய பின் கருணாநிதி தகவல்

சென்னை,மே7

இலங்கைக்கு இந்திய இராணுவத்தையோ இராணுவத் தளபாடங்களையோ அனுப்புவதில்லை என்ற முடிவில் மத்திய அரசு மிகவும் உறுதியாக இருக்கின்றது.

மேற்கண்டவாறு தமிழக முதலமைச்சர் மு.கருணாநிதி தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் இலங்கைப் பிரச்சினை குறித்து இந்தியப் பிரதமர் வாஜ்பாயுடன் பேச்சுக்கள் நடத்திய பின் சென்னை வந்த முதலமைச்சர் சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

இலங்கைப் பிரச்சினையில் தமிழ் நாட்டில் உள்ள தேசிய ஜனநாயகக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகளுடன் ஆலோசித்த பிறகே மத்திய அரசு எந்த முடிவும் எடுக்கும் என்றும் கருணாநிதி கூறினார்.

"நீங்கள் கொடுத்த யோசனை என்ன?" என்று செய்தியாளர் கேட்டதற்கு, ஒரு முக்கியமான பிரச்சினையில் யோசனைகள் தெரிவித்துள்ளேன். அதை வெளிப்படையாகக் கூறமுடியாது என்றார் கருணாநிதி.

பாகிஸ்தான் போன்ற நாடுகள் இலங்கைக்கு தனது இராணுவத்தை அனுப்பினால் தமிழர்களைக் காப்பாற்ற இந்தியா இராணுவத்தை அனுப்ப வேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சி கூறியிருப்பது பற்றி கேட்டபோது அது அவர்கள் கருத்து இது பற்றி இப்போது நான் எதையும் கூற விரும்பவில்லை என்றும் - கருணாநிதி பதிலளித்தார்.

இலங்கையில் இருந்து வரும் அகதிகள் தடுத்து நிறுத்தப்படுவார்களா எனக் கேட்டபோது நிலைமைக்கேற்றவாறு முடிவு எடுக்கப்படும் என்றும் அவர் சொன்னார். (இ-6)

### சூட்டுச் சத்தம்

யாழ்ப்பாணம்,மே7

நேற்று இரவு சுமார் 7.30 மணியளவில் மண்டைதீவை அண்மித்த பகுதியில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் சரமாரியாகக் கேட்டன.

### கோண்டாவில் இளம்பெண்

# பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டாரா?

யாழ்ப்பாணம்,மே7

கோண்டாவில் மயானப் பகுதியில் நேற்றுமுன்தினம் மீட்கப்பட்ட பெண்ணின் சடலத்தில் அப்பெண் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதற்கான காயங்கள் காணப்படுவதாக யாழ். நீதிமன்ற பதில் நீதிவான் மு.திருநாவுக்கரசு தெரிவித்தார்.

யாழ். சட்ட வைத்திய அதிகாரியினால் நேற்று இந்தச் சடலம் பரிசோதனை செய்யப்பட்ட போது கழுத்து நெரித்துக் கொல்லப்பட்டதற்கான அடையாளம் காணப்படுவதாகவும் -

பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதற்கான வெளிக் காயங்கள் இருப்பதாகவும் சட்ட வைத்திய அதிகாரியினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சடலத்திலிருந்து தலைக்கு அணியும் நெற், சட்டை, தோடு, மார்புக்கச்சை போன்றவையும் எடுக்கப்பட்டு அடையாளம் காண்பதற்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளன.

பொதுமக்கள் இந்தச் சடலத்தை யாழ். போதனாவைத்தியசாலைக்குச் சென்று அடையாளம் காட்ட முடியும் என்று நீதிமன்ற வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தச் சடலத்தை மேலதிக பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பிவைக்குமாறு யாழ். சட்ட வைத்திய அதிகாரி தெரிவித்துள்ள போதிலும் இது தொடர்பாக யாழ். நீதிமன்ற நீதிவான் ஆர்.ரி.விக்னராஜாவுடன் கலந்தாலோசித்த பின் முடிவு செய்யப்படும் என்று பதில் நீதிபதி தெரிவித்துள்ளார். (இ-5)


புலமைப் பரிசில் திட்டத்தின் மே மாத பிரிவுகள் ஆரம்பம்

வார இறுதி: 14-05-2K
வார நாள்: 16-05-2K } 10.00மணி

✦ புலமைப்பரிசில்திட்டம் 2000இல் தெரிவுசெய்யப்பட்டு மே மாதம் தமது பயிற்சி நெறிகளை மேற்கொள்ள விரும்பும் மாணவர்கள் இன்று (07-05-2000) ஞாயிறு தொடக்கம் தமது பதிவுகளை மேற்கொள்ளலாம்.

✦ புதிதாக இணைய விரும்பும் மாணவர்களும் தமது பதிவுகளை இன்று(07-05-2000) ஞாயிறு தொடக்கம் மேற்கொள்ளலாம்.

இயக்குநர்
IIS

100,மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். (C/12054)



திருகோணமலைக்கு வெங்காயம்,புகையிலை ஏற்றுவோர் கவனத்துக்கு!

எதிர்வரும் புதன்கிழமை (10-05-2000) வெங்காயம், புகையிலை ஏற்ற இருப்பதனால் அனுப்ப வேண்டியவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

ஜெசீபா ஏஜென்சீ

132. ஸ்ரான்லி வீதி.
யாழ்ப்பாணம்.

* கடை தொ.இல 2407 * வீட்டு தொ.இல 3232
(C/12057)



BITSMANS

கல்வி நிறுவனம் மானிப்பாய்.

பிரிவு II அனுமதிகள் நிறுத்தப்பட்டுள்ளன.

பிரிவு III O/L DAY CLASS

(எமது வழமையான 'SUPER GRADE' ஆசிரியர் குழு)
ஆரம்பம்: நாளை (08-05-2000) திங்கள் காலை 8.00 மணி.

(76034)



STP COMPUTER WORLD

No. 54 A, Palaly Road,
Kantharmadam,
Jaffna.

T.P:- 021-2674
E-mail:-stpcom@sltnet.lk
Reg.No NAL/SD/377

NCCA பரீட்சைகளுக்கு (Basic & Intermediate levels) விண்ணப்பித்துள்ள மாணவர்களுக்கான பயிற்சி வகுப்புக்கள்.

மேற்படி பரீட்சைகளுக்கு விண்ணப்பித்துள்ள மாணவர்களுக்கான பல பிரிவுகளைக் கொண்ட வகுப்புக்கள்:

| | | |
|---|---|---|
| Batch I | : sat & sun | 8.30 - 10.30 |
| Batch II | : Sat & sun | 3.30 - 5.30 |
| Batch III | : Tue & Thu | 9.30 - 11.30 |

❖ மாணவர்கள் தமக்கு வசதியான ஒரு நேரத்துக்குரிய பிரிவில் இணைந்து கொள்ளலாம்.
❖ தனிப்பட்ட குழுக்களாக இணைய விரும்புபவர்களுக்கான வகுப்புக்களும் ஒழுங்கு செய்யப்படும்.
❖ கையேடுகளுடனான விரிவுரைகளும் செய்முறை வழிகாட்டிகளுடனான செய்முறைகளும் சேர்ந்த பயிற்சி வகுப்புக்கள்.
❖ பட்டதாரி விரிவுரையாளர்களின் ஒருங்கிணைந்த சேவை.

மேலதிக விவரங்களுக்கு......

நிர்வாகி
STP COMPUTER WORLD.

(C/12062)


## மரண அறிவித்தல்

### திருமதி குமாரசாமி செல்லாச்சி (செல்லம்மா)

(ஓய்வுபெற்ற அதிபர்)

கரணவாய் கிழக்கைச் சேர்ந்த திருமதி குமாரசாமி செல்லாச்சி (செல்லம்மா - ஓய்வுபெற்ற அதிபர்) நேற்று 06-05-2000 சனிக்கிழமை பிற்பகல் 1-00 மணியளவில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற குமாரசாமி அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற வெற்றிவேலு, மீனாட்சியின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற குகப்பிரசாதம், குகலோசனாதேவி, குகதாசன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தாயாரும், சோதிலிங்கம் (பொறியியலாளர்), இராசமணி (இந்தியா) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜெயசங்கர் (பொறியியல்பீட மாணவன், மொறட்டுவ), கிரிஷாந்தி, ரவிசங்கர், பிரமிளா (கனடா), பிறேம்குமார் (இந்தியா), பிரதாபன் (இந்தியா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், கமலேஸ்வரியின் உடன் பிறவாத சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (07-05-2000) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குகலோசனாதேவி
(மகள்)

*விக்கினேஸ்வராக் கல்லூரி வீதி,*
*கரவெட்டி.*

(C/12069)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 07-05-2000இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.